# ஞானபோதினி.

ஸம்புடம் IV. } 1901ஹூ ஜூலைமீ 20உ { புத்தகம் 12

## மதுரைப்புதுச் சங்கம்.

உலகெலாம் புகழும் பலமொழியுள்ளும் இன்னிசைத்தாங் தமிழன்னம் வீற்றிருந்த பதுமமெனப்படும் மதுரைமாநகரம் நெடுங்காலமாய்த்தன்னை நாடியிருந்தசெந்தமிழ்ச்சங்கத்தினைத்துறந்து குவிந்து கிடந்தநிலை யாவர்க்குந் தெரிந்ததன்றே? ஏறக்குறைய ஈராயிரமாண்டுகளாகத் தமிழ்மகள் அன்புடன் வளர்த்த மக்களனைவரும் சிறிது காலந்தாயினைப் போற்றறுமாறு போல் நடித்துப்பின்னர்ப் பிறமக்களை மணந்து இன்பநுகர்ந்து, நாளுக்கு நாட்பெற்றதாயினை யலக்ஷியஞ் செய்து கடைசியாய் முற்றிலும் மறந்தனரோ? இல்லையாயின் தமிழ்மகள் நாடொறும் மெலிந்து நலிவுற்று ஆதரிப்பாரற்றுக்கிடப்பதற்குக்காரண மென்னைகொல்? "மதுரைமா நகரே! வேற்று நாயகன் கரங்களாற் றீண்டினனெனச் சங்கத்தினைத்துறந்து குவிந்தனைகொல்? பரிதியம் புலவன் நின்னகத்துதித்தும் நீமலராதிருந்த தென்னையோ? உறக்கங் கொண்டனையோ? ஊடல் கொண்டனையோ? அன்றி நின் நாயகனை மறந்து நின்னைத் தீண்டிய கணவனைப் புணர்ந்தனையோ?" என்று யாவரும் நிந்திக்கலாயினரே! மதுரைமா நகரத்திற்பிறந்து வளர்ந்தவரும் அந்நகரைத் தம்பதியாக் கூறவும் வெள்குகின்றனர். பரிதிமாற் கலைஞனும் ஊடல் கொண்டனளென நினைத்துப் பல்வகைப்பாடல்களாற் கண் விழித்துப்பார்க்கச் செய்யுமாறு முயன்றும் பயனற்றுப் போனமையாற் பரிந்திரங்கி "மதுரைமா நகர்" எனப்பெயரிட்டுப் பின்வரும்பாவினை யியற்றலாயினன் :—

### நிலைமண்டில வாசிரியப்பா.

"உலகமெங்கு மிலகு நகர்பல
கழிபெருஞ் செல்வக் கள்ளாட் டயரத்
தான்மாத் திரையின் வான்மீத் திரியும்
வளமழை பொய்த்து விளைபொருள் குன்றி
மயங்குறு காலை வயங்குமேற் றிசையோர்

மகீதலத் தின்கட் பகீரதன் போலப்
பேரியா றதனை மாரியு நாணிமெய்
விளர்ப்ப வையையோ டளவக் கூட்டி
விளைவெலா மலியுமா விரும்பிச் செயவொளிர்
மதுரைமா நகரே! மதுரைமா நகரே!
செல்வப் பொருளே சிறப்புடைப் பொருளென
வொல்வகை யுண்மை யுணர்கிலை கொண்டனை.
அதனை யாக்கும் விதமறிந் தவற்றிற்
றலைப்பட் டுழலுந் தனிப்பெரு நகரே!
நிலைப்பட் டிருக்கு நீர்மையெய் தினையோ?
நினைக்குறித் தந்தோ நினைக்குந் தோறுந்
துன்ப மிகுந்து சோரு மென்னுளம்!
இன்பமீ தூரு மெவர்க்குந் தாந்தாம்
பிறந்த நகரெனில்; பேசிய விந்நிலை
யென்னிட மாறிய தென்னைகொல்? அறியேன்.
நின்னிற் பிரிந்து நெடுங்கலை கற்பேன்
சென்னை போந்துஞ் சிறியனே னுள்ளம்
பன்னாள் சென்றும் பரிந்து நிற்காண்
வேட்கை மேவி விரைந்தாண்டு தோறு
மிருமதி நின்வயி னிருந்தேன். அம்ம! நீ
யுயர்நிலை தவறி நயமெலாந் தொலைந்து
வீழ்நிலை யுற்றனை! மேதக்க மதுராய்!
எவன்கொலோ விவ்வா றவநிலை யெய்தினை?
நச்சிப் பாண்டியர் மெய்ச்சி வளர்த்து
சங்க மிருந்து பொங்கிய நன்னகர்
மதுரையென் றான்றோர் வகுத்துக் கூறிய
தெதிர்மறை யிலக்கணை யென்பது பற்றியோ?
வஞ்சப் புகழ்ச்சியோ? மற்றெனோ? அறியேன்.
நஞ்செனக் கருதியோ நற்றமி ழமுதைப்
பேதைமை கந்தா மாதுய ருறுவாய்
பருகலை யதன் சுவைக் குருகலை யிருத்தி?
மறையெலாம் புகழு மிறையனா ரென்னு
நறுந்தமிழ்ப் புலவர் சிறந்துவீற் றிருந்த
வளநக ராகிய மதுரையு நீகொலோ?
ஆல வாயி னவிர்சடைக் கடவுளை
யேலவா தித்த வின்றமிழ்க் கீரன்
வந்தவ தரித்த மதுரையு நீகொலோ?
தமிழ்மண மிகுந்து கமழு நாடெலா
முள்ள பாவல ருள்ளிநின் பெருமையைத்
தந்தம நூல்களை விந்தை யரங்கினி
லேற்றி நூற்பொருள் சாற்றல் வேண்டியு
மரசர்பாற் பற்பல பரிசு கருதியுங்
காடெலாங் கடந்து நாடொறும் போந்து
முதுதமிழ் கொழித்த மதுரையு நீகொலோ?

பதினெண் கூலமு மிதன்க ணுளவெனச்
சாற்றுவார் போலச் சாத்தனா ரென்னு
மேற்றகைப் புலவர் வேட்டினி திருந்து
மதுரநூல் யாத்த மதுரையு நீகொலோ ?
நால்வர் குரவரு மேல்வகைத் தமிழிற்
பண்ணிசைப் பாட்டிற் பரிந்து புகழ்ந்த
மண்ணில்விண் ணகரெனா மதுரையு நீகொலோ?
அமிழ்தினு மினிய தமிழி னின்சுவை
யுணர்ந்தநீர் வையை மணந்த பாண்டியன்
பதியென வயங்கிய மதுரையு நீகொலோ?
வல்லாள ரேத்துங் கல்லாடர் தாஞ்செய்
கல்லாட மென்னுங் கனித்தமிழ் நூலுட்
சொல்லாயுஞ் சங்கத் தொல்பொரு நகரென
வெல்லாருங் கொள்வா னின்னிசை யகவற்
பாத்தொறு முரைத்துப் பரிவுடன் புகழ்ந்த
மதிகுல வேந்தர்த மதுரையு நீகொலோ ?
செந்தமிழ்ப் பாற்கடற் புந்திமத் தாற்கடைந்
துட்பொரு ளாகிய தட்பநல் லமுதை
யுரையெனத் தந்த நரைமூ தாள
ரந்தண குலத்தின் விந்தையிற் றோன்றி
யன்னார்ப் பற்றிய வின்னாப் பழமொழி
போலி யுரையெனச் சால விளக்கிய
வுச்சிமேற் புலவர்கொ ணச்சினார்க் கினியர்
மாண்புட னிருந்த மதுரையு நீகொலோ?
புலத்தமிழ் தோற்ற போலி மதுராய் !
நலத்தெரி வில்லாய் ! நாணிலைபோலும்.
அன்னோ வென்றன் மெய்ந்நடுங் குறுமால்!
அஞ்ஞான்றை யுயர்வென்! இஞ்ஞான்றை யிழிவென்!
மனைவிசொற் கேட்டுத் தனையீன் றெடுத்த
தாயினைப் பசியிற் றீய விடுக்கும்
பதகனை யொத்த மதுரைமா நகரே !
பொருத்தமின் முரணிருள் போக்கியெங் குஞ்சீர்
திருத்தமென் பரிதி திகழ்ந்து தோன்றியும்
பயிலுந் தமிழ்த்தாய் வெயிலுறத் தள்ளித்
துயிலுகின் றனையோ? தொல்சீர் மதுராய் !
நன்றி யறிவிலாய்! குன்றிய சிந்தையாய்!
குறையே நயமெனக் கொண்டு பிதற்றுவோய் !
உன்வயிற் பிறந்தேன் யானென வுரைக்கவும்
வெள்கினேன்! அந்தோ! வெள்கினேன்! அந்தோ !
இன்னணம் வெள்குவோ ரின்னு மெத்துணைப்
பெயரோ? அறியேன். மயலார் மதுராய்!
அழிநிலை யடையா தெழுதி; துயிலுத
லொழிதி; தமிழ்நிலை விழிகொடு காண்டி;
அவளிசைத் தேறல் செவிவாய்ப் பருகுதி;

நந்தலி லின்பஞ் சிந்தையிற் பெறுதி.
என்னே சொற்றே னென்ன வெண்ணலை.
அருந்தமிழ்த் தாயின் திருந்திய வன்பினற்
சிறியனே னித்துணை செறியெனக் கூறினேன்.
என்னை வெகுளலை ; என்னன் பதனை
வேண்டு மெனினீ வெகுள்க ; மற்றுச்
" சொல்வன்மை யுண்டெனிற் கொன்னே விடுத்திடல்
நல்வினை கோறலின் வேறன்" றென்ன
வுரைத்த புலவனு முளனல். தமரே
யெனினு மவர்பிழை யினிதெடுத் துரைத்தல்
கடனே யன்றோ? கழறாய். அன்றியு
நின்பா லெனக்குள வன்பால் யானுரை
செய்த விதனைநீ நொய்தெனக் கருதி
வாளா காலம் போக்கலை. மதுராய் !
மீளாய் தமிழ்நலம் விருபியுய் வாயென."

அப்பாவின்பயன் கொலோ, மதுரைமாநகர் இப்பொழுதத்துச் சிறிது கண்விழித்துப்பார்க்கலாயினள்? யான் சின்னாண்முன்னர்ச் சென்னைக்குப் போந்த காலத்து, மதுரைக்கட்புதுவுதோர் தமிழ்ச் சங்கம் கூட்டுகின்றன ரெனச் சுதேசமித்திரன் பத்திரிகை வாயிலான் அறிந்தயான் கழிபேருவகை பூத்தனன். தமிழறிந்தயாவரும் அங்ஙனங்களிப்படைவா ரென்பதற் கோரையப்பாடுமில்லை. இச்சங்கத்தினைக் கூட்டுதற்குப் பாலவனத்தம் ஜமீன்தாரராகிய உக்கிரப்பெருவழுதி யென்னும் இயற்பெயருடைய பாண்டித் துரைசாமித்தேவர் காரணகர்த்தராயிருத்தலையுன்னின் மூன்றாஞ் சங்கத்தினைப்பரிந்துபோற்றிய உக்கிரப்பெருவழுதியாரே, தாங்கூட்டிய சங்கங்கடைச்சங்க மென்னும் பெயரெய்திக் கழிந்தனவற்று ளொன்றாயிற்றேயெனப் பரிதபித்து மீட்டுமவதரித்தனர் போலும் ! மதுரையம்பதுமம் தன்னையாதரித்தார் விண்ணுல கெய்தின ரெனத்துயருற்றுச் "சங்கந்துறந் தன்னமிலாம"ன், மீட்டும் அவரைப் பெறும் ஆகூழ்க்காலத்தினை யுறுமாறு தவமியற்றிய தெனவே கூறல் வேண்டும்.

இனியிது காறும் நிகழ்ந்தனவற்றான், புதுச்சங்கங் கூடுதல் ஒருதலையெனத் தெரிய வருகின்றமையால், இச்சங்கம் இடையூறின்றி நீடூழி நிலைபெற்றிருத்தற்கு இன்றியமையாதனவற்றை, கற்றறிந்தோர் பலருமெடுத்துரைத்தன ராயினும், யானுமவற்றைக் கூறுதலாற் பயனுள தெனத்தோன்றுகின்றமையின், என் சிற்றறிவிற்குப் புலப்பட்டன சிலவற்றை யெடுத்துரைக்கின்றனென்.

சங்கம் நிறுவுதல் மதுரையம்பதியிலாயினுந் தமிழ் வழங்கும், குணக்டல், குமரி, குடகம் வேங்கடமெனு நான் கெல்லையுடைத்தாய நாட்டின் பல்லிடங்களிலும், கிளைச்சங்கங்களும்; அருந்தமிழமுதினை யூட்டுதற்குக்கல்லூரிகளும், புத்தகசாலைகளு மேற்படுத்தலோடும், கற்றுத்தேறியவர்க்குப் பரிசும்பட்டமு மளித்தலும், நம்முனோர் செய்தவாறு வடமொழி நூல் பலவற்றை மொழி பெயர்த்தலோடும், ஆங்கிலத்துள்ள, உயிர்நூல், உடனூல், மனிதநூல், செல்வநூல் முதலியவற்றை மொழிபெயர்ப்பித்தும், அங்ஙனஞ் செய்தாரையாதரித்தும், பத்தியமே யன்றிக்கத்தியமும் போற்றியும், சங்கத்து நிகழ்வனவற்றைப் பல்லோரும் அறிதற்கேதுவாய்ப்பத்திரிகைகள் விடுத்தும், இயற்றமிழேயன்றி யிசைத்தமிழும் நாடகத்தமிழும் பெரிதும் வளரச் செய்தும், செந்தமிழறிந்து புது நூலியற்லுபவரை யலக்ஷியஞ்செய்யும் புல்லறிவாளர்க்கு நல்லறிவூட்டியும் வருதல் வேண்டும். இவையிற்றை யெல்லாம் முதற்கட் செய்யவாரம்பித்தலியலாதாயினும், நாளடைவிற் செய்வரென நம்புகின்றேன். அங்ஙனம் நிறைவேற வேண்டுமாயின், நல்லறிவுக் கண்மயங்கிக் குற்றங் காண்டலே தொழிலாய்க் கொண்ட புன்னெறியினராய போலியாராய்ச்சியரையும் தாம்பதித்தநூலின் பொருளுமறியாப் போலிப்புலவரையும் சங்கத் தலைவராக்காது நல்லிலக்கணம் பலகுடி கொண்ட பேரறிவாளரை நியமிப்பாராக.

புதுச் சங்கங் கூட்டுவோர் மேற்கூறியவற்றை நன்காராய்வராக. எம்மாலவாய்ப் பெருமானருளாற் பரிதியம்புலவரும், உக்கிரப்பெரு வழுதியாரும் சங்கத்தி னுர்வத்தைக் கண்டுகளித்து நீடுழிகாலம் வாழ்வாராக. சங்கமும் புதிதாய் மலர்ந்த மதுரையங்கமலத்து வீற்றிருந்து ஈதில்சீ ரெய்துவதாக.

ஜ. ப. வாசுதேவைய பந்துலு.

---

## மதிவாணன் கதை.

---

(III-ஆம் சம்புடம், 44-ஆம் பக்கத்தொடர்ச்சி.)

### அத்தியாயம்-கஉ.

இங்ஙனம் பிடியுண்டமாயவன் சிறைக்கோட்டத்திடப்பெற்றான். மற்று, அரண்மனை மாடமீமிசை மன்னவனெடுஞ்சென்ற

மதிவாணன் பாண்டியனது அந்தப்புரத்திலுள்ள மகளிர்க்கிடையேசென்று சேர்ந்தான். சேர்ந்துழி வேந்தனுணையின் வண்ணம் ஆண்டு வேய்ந்துளதோ ரிருக்கையின் கண் வீற்றிருந்தனன். இருந்த மதிவாணனைக்கண்ட மகளிரெல்லாம் உள்ளத்துவகை பொங்கிப் புன்முறுவல் பூத்தனர். அப்போழ்தத்துக் கன்னிமாடத்தினின்றும் பாங்கியர் பலர்புடை சூழ இன்பவல்லியும் போந்து கோப்பெருந்தேவியின் அருகர் நின்றுள். உடனே வேம்பனுந் தன்வயிற் பிறந்த கரும்பனைய கன்னியைச் சுட்டி, "மதிவாண! இவளையன்றே நீ காண்டல் வேட்டது?" என்று கூறலும் மதிவாணன் "ஐயனே! இந்நங்கையை யன்றே யான் கைப்பிடித்தல் வேட்டது!" என்றனன். தான் படத்தினிற் கண்ட சாரிகையைக் கண்ணெதிரே காணப்பெற்ற மதிவாணன், தன்பால் நிகழ்ந்த மெய்ப்பாட்டினை யடக்கும் வலியின்றி யுழலுவான் புன்முறுவல் பூத்தான். இன்பவல்லியும் இடையிடையே தனது காதலனைக் கட்கடையால் நோக்குவாள்; உள்ளங்களிப்பாள்; இளநகையரும்புவாள்; ஒருபுறந் திரும்புவாள்; பெருந்தேவியின் புறத்தே நாணத்தினுற்றனது முகத்தினைக் கரப்பாள். இவ்வாறு சிறிது போழ்து கழிந்தது. அதன்மேல் இன்பவல்லி, பொள்ளெனப் போந்து, மதிவாண வள்ளலைத் தாளின்கட்பணிந்தாள். அதனை யெதிர்பாராத அருந்தமிழ்க் குரிசில் மதிவாணனும் இறும்பூது மிகுந்து இன்னசெய்வதென்றறியானுய்ச் செழியனை யொருமுறை யேறட்டுப்பார்த்துத் தன இருகரங்களானும் நங்கையர் தலைமணி இன்பவல்லியை வாரியெடுத்தலும் அவள் அவன் அருகரிருந்த தோராதனத்தின்கண் இருந்தனள்.

அதன்பினர் வழுதி "ஐய! மதிவாண! நும்மிருவர்க்கும் யாங்கள் எமக்குள்ளே மணவினை செய்து முடிக்கவேண்டுமென்று கருதியதற்கேற்ப ஆலவாய்ப் பெருமானடிகளருளினுல் நீவிரிருவிருங் காதலுறுவீராயினிர். காத லில்வழிச் செய்யுங் கடிமணங் கடியப்படுவதொன்றன்றே? 'நும்மிருவர்க்கும் எங்கே மெய்க் காதல் நிகழாது போய்விடுமோ?' என்று ஏங்குவேன் வயிற்றில் தனிப்பெருங் கடவுளார் பாலைப்பெய்தனர்" என்று சொல்லிக் கொண்டிருக்குமளவில், 'மதிவாணன் றந்தையார் தஞ்சைவாணர் மதுரைமாநகரம் போந்தனர்' என்ற செய்தி அரசன் செவிகளில்

வீழ்ந்தது. உடனே யாவரும் எழுந்தனர். மீனவர் கோமான் மதிவாணனை ஆண்டேயிருக்கும்படி பணித்துவிட்டு ஞெரேலென வெளிச்சென்றனன். அவ்வமையத்துப் புடைநின்ற மகளிருங் கோப் பெருந்தேவியோ டகன்றனர்.

அந்நிலையிற் றனித்திருந்த இன்பவல்லி சிறிது வெரூஉக் கொண்டனளாயினும் அதனையண்ணல் மதிவாணனறியாது மறைத்தனள். சிறிதுநேரம் ஒருவரோடொருவர் பேசாது நம்பியும் நங்கையும் வாய்வாளாமை மேற்கொண்டனர். அதன்மேல் மதிவாணன் இன்பவல்லியையணுகி "என்னுயிர்க்காதலீ! நீ நிறம் வேறுபடக்காரணமென்னை? எந்தையார் இவ்வயின் முதலமைச்சராயிதுழி, நாமிருவேமுங் குழவிப்பருவத்து நட்பாளரல்லெமோ? அதனை மறந்துகொல் மடவாய்! நீயின்னணம் நாணுவாயாயினை? நீயென்னை மறப்பினும் யானுனைமறப்பலோ? அன்புடையாய்!" என்றலும் இன்பவல்லி, குயிலுநாணுறுமினியகுரலில் "தேவ! அங்ஙனம் எண்ணலை. என்னிலையிற்றென்று புனைந்து கூறவல்லெனல்லேன். நின்னைக்கண்டேன் காதல்கொண்டேன். அவ்வளவே. அதற்குமேல் யானொன்று மறியேன்" என்றனள். எப்பொழுது பேசுவாளோவென்று எதிர்பார்த்து அவளது கிளவி வேட்டு நின்ற மதிவாணன் செவியில் அமுதம் பெய்தது போலும் இருந்தன அவள் மொழிகள். உடனே மதிவாணன் "மாதராய்! யாமிருவரும் அரண்மனையினுப்பணுள இளமரக்காவிற்குப்போக ஒருப்படுதியோ?" என்றலும் இன்பவல்லி யெழுந்தனள். அவளைக் கையிற் பிடித்துக்கொண்டு மதிவாணனுமேகினன்.

இஃதிவ்வாறாகத் தஞ்சை வாணரும் மாவீர வழுதியும் அளவளாவிப் பற்பல விடயங்களையும்பற்றிப் பேசியபின்னர் வாணனார் மன்னவனை நோக்கி "மணவினை முடியுங்காறுந் திரிசிரபுரக் கலகச் செய்தியைக்குறித்து நிகழும் விசாரணையை நிறுத்திவைக்கலாம். அங்ஙனஞ் செய்தலே நேர்" என்ற அளவில் உசிதனும் ஓமென விணங்கினன்.

அதன் மேல் நாலைந்து நாள் காறும் மணவினைக்குரிய செயல்களே நிகழ்ந்து கொண்டிருந்தன. அரசனாணையின்படி வள்ளுவராயினார் அரசுவாவின் மீது முரசமேற்றிக் 'கோ

மகள் இன்பவல்லியின் மணவினை நிகழ்ச்சிக்கு அறிகுறியாக் நகரெங்கும் அலங்கரிக்க' என்று முழக்கிச்சாற்று முன்னரே, நக ருளார் தங் களிப்பிற்கு வெளியறிகுறியாகத் தங்கள் வீட்டு வாயி ஹேறும் பழமணன் மாற்றிப் புதுமணல் பரப்பினர் ; பந்தர் பல வேய்ந்தனர் : தூண்களில் தாறிட்ட வாழையுங் காய்க்குலைக் கமு குந் திரடிங்கரும்புந் தெங்கிளம்பாளையுங் கட்டினர் ; மயிலெனக் குயிலெனப் பாம்பெனக் கிளியெனத் தோரணம்பல தூக்கினர் ; பூரண கும்பமும் பொலம் பாலிகைகளும் வைத்தனர் ; நறுமணங் கமழு நாண்மலர் மாலைகள் நாற்றினர்.

இனி யரண்மனை வாயிலினலங்கார த்தை யிற்றென வெடுத்து ரைத்தல் எம்மனோர்க்கியலா தெனினும் ஓராற்றாற் கூறுகின்றாம். முன்வாயின் முகமெல்லாம் முத்தெடுத்தார் ; தாமரை வெண் முளைகள் பாய்த்தினர் ; மின்வாய மணிக்கலசத்திற் பொற் செந் நெற்கதிர்கள் சூட்டி விளங்கவைத்தார் ; பொன்வாழைகளை மரக தப்பைங்கமுகளோடுந் தோரணவாயிலில் ஏரணவ நாட்டினர் ; ஒன்பான் மணிகளினுங் குயிற்றிய மீனக்கொடிகள்பல வானத்த சைந்தன. வலம்புரிச்சங்கம் நலம்புரிந்தேங்கின ; மாரியு நடுங் கப் பேரிகை யதிர்ந்தன ; வீதி யெங்கும் விழவறாவாயின ; பதியி லார் வயின்றொறுஞ் சுதிபல வெழுப்பிச் சதிநயங் காட்டினர் ; நா டகக்கூத்தியர் ஆடகத்தாக்கிய அரங்கினிலேறி அன்பொடு நடித் தனர்.

இவ்வாறு மதுரைமா நகரமெங்கணும் பொன்னகரு நாணி யொதுங்கப் பொலிந்திருந்தது ; இந்திரன் காமுற்று நாடொறும் வலம்வரும் மருதமாதேவியின் நாட்கமல முகம்போல, கடலாடை புடையுடுத்த நிலமகளின் விழிபோல, நிலவி விளங்கிற்று.

அரசனுங் குடிகளு மம்ம வேறல
ருரைசெயி னுயிருலா முடல மாவராற்
கரிசறு காவலன் கன்னி மாமணம்
பரசுபு மதுரையம் பதிவ யங்கிற்றே.

பன்னிரண்டாம் அத்தியாயம் முற்றிற்று.

வி. கோ. சூரியநாராயணசாஸ்திரியார்.

# உள்ளப்பயிற்சி. *

## V. பகுத்தறிவு.

தர்க்கிக்கும் சக்தியைப் பலப்படுத்துவான் **தருக்கநூலையும், ஆன்ம தத்துவநூலையும்** ஒழுங்காக ஒருவரைக் கற்கத்தொடங்கும்படி யாம் அறிவுறுத்த வேண்டுமாவென்று யாரேனும் ஒரு சிறுவன் எம்மிடத்து வினவ நசைகொள்வான் போலும். இவ்வினாவை விடுக்குதும். "நீர் முதலிற் கேவல மாணாக்கனுக்குரிய செயற்கையொழுக்கத்திற்கு முரணாக இயற்கை நெறியிற் சிந்தித்து வாதிக்கும் சாதாரண வழக்கப்பயிற்சி பெற்றிருப்பின் நிச்சயமாகவே எவ்வகையானும் தொடங்கலாம்." மக்கள் முதன்மையாகக் கால்கள் அடைந்திருந்து, பின்பு அவைகளை உபயோகப்படுத்தியே நடக்கக் கற்றிருக்கின்றனர். இதன் பின் யுத்தத்திற்குரிய நடை பயிற்றும் ஒருத்தியோகஸ்தனிட மடைந்து செலவு கற்கவும், பல்வகைத் திறமுள்ள பெயர்ச்சி புரியவும் தெரிந்து கொள்ளலாம். பயிற்சியடையாத கேவலம் இடப்பெயர்ச்சியில் எம்மடங்கு அனுபவத்தினானும் இவற்றை அடைதலியலாது. சிந்தனைத் தொழிலினும் இவ்வாறே யாம். முதலில், நீவிர் சிந்தனை செய்ம்மின், சிந்தனை செய்பொருள்களும் பல கொண்மின், பின்னர் ஒருதார்க்கிகனையடைந்து கொள்கை முடிவுகளை நீவிரடைந்தவாற்றைக் கூரிய பார்வையுடன் நோக்கித் தேர்ந்தறிவதை நுமக்குப் போதிக்குமாறு அவனைக் கேட்டுக்கொண்மின். இவ்வாறாகில், தர்க்கநூற் கல்வி மிகப்பயன்படுமென்பதில் ஐயப்பாடில்லை. ஆனால் தனித்தர்க்க வியலினின்றுமே வாழ்க்கைப் பெருஞ்சோலையில் முதிர்ந்தகனி நல்கத்தக்கதோர் கருத்து ஏதேனும் தழைத்தோங்குதலைப் பெற முயல்வது ,என்றும் வீண் தொழிலே. என்னோவெனின் இச்சாத்திரம் யாவகைச் சிந்தனையும் நிகழ வேண்டிய பொதுப்படிகளை மாத்திரம் வரிசையாய்க் குறிக்கின்றதே யன்றி வேறு உண்மைப்பொருளடக்க மொன்றும் கணிதநூல் போன்று இலதாகும். கேவலம் ஒருதார்க்கிகனைச் சிறந்த தத்துவ நிபுணனாக்குவதினும், சிலம்பவித்தை பயிற்றுவோனினின்றும் சிறந்த சுதேசாபிமானியை உண்டாக்குவது எளிதாம். உண்மையில், கருவி நூலனைத்திற்கும் இஃது ஒக்கும். இலக்கணமும் அணிநூலும் ஒருங்கே குறுகிய பயனுடையன. வாழ்க்கையும், அனுபவமும் அளித்த உபகரணங்களைப்பற்றி உரைக்கும் போதே இவை பயன் படுவனவாம். சிந்தனை விதிகளைக் கற்பதனால் அஃகிய வறிவை விரிந்ததாக்கலும், குறுகிய அறிவைப்பரந்ததாக்கலும் இயலா. இடைக்காலத்துத் தத்துவநூலோரின் தருக்க விலக்கணத்திற்கு, உறுதிப்பாடுடைய ஊக்கம், பரந்த அனுதாபம், கூர்ந்த உற்றுணர்வு, பல்வகை அனுபவம், இவையனைத்தும் ஈடாகும். எனி

* The Culture of the Intellect.

னும், இத்தருக்க நூல்பயனற்றதன்று. இது, புதுவதுபடைக்கும் தன்மைத்தன்றி, ஒழுங்கு படுத்துமாற்றலுடையது. ஓவியம்வரைதற்கு உறுப்புநூல் பயன்படுமாறுபோல இதுவும் சிந்தனை செய்தற்குப்பயன்படும். உமதுநியாயத்தின் உருப்படிவத்தினது இணக்கத்திலும் பொருத்தத்திலும், இஃது உமக்கு மிக்கவுறுதியான பற்றுக்கோடாகின்றது. ஆனால் உறுப்பு நூல் அழகிதோர் ஓவியமொன்றைத் தானே தீட்டமுடியாதவாறுபோலத் தருக்கவிலக்கணமும் மெய்யறிவை விளைத்தலியலாது. குற்றங்களையும், போலி நியாயங்களையும், வெளிப்படுத்தலில் இது பெருந்துணைக் கருவியாக நிற்கின்றது. ஆயின், சிறந்ததோர் உண்மைப்பொருளைக் காண்டல்நெறியிற் செல்லுதற்கு கலாசாலைகளிற் கிடைக்கப்பெறாத வாழ்க்கையூற்றுக்களினின்று தனது இயக்கவன்மையையும், பொருட்காட்சிச்சாலைகளுளொன்றிலும் சேர்த்து வைக்கப்பெறாத, ஜீவப்பிரபஞ்சத்தைப்பற்றிய விஷயங்களினின்று தனது உபகரணங்களையும் இது பெற்றுக்கோடல் வேண்டும். இஃது ஆன்மதத்துவ நூலிற்கும் பொருந்தும். அந்நூல் இருவகைப் பயனுடைத்தாம். முதற்கண் மானுட சக்தி அளவினது இன்றியமையா எல்லைகளை நமக்கு அது தெருட்டும். நமது அகந்தையை அடக்கி ஆழ்ந்த அடியற்ற ஆராய்ச்சிப் பெருங்கடலுட் சிறிது வருந்தி ஊடாடினதன் பின்னர் நாம் கருதியிருந்ததைக் காட்டிலும் மிகப்பரவியது இவ்வுலகமென்றும், அதைப்பற்றிய நமதெண்ணங்களெல்லாம் பொருட்செறிவற்றனவென்றும் நாம் உணரும்படி அது செய்யாநின்றது. "இது தீமைநீக்கற் பயனன்றி நன்மை புகட்டற் பயனன்றே" எனினும் அது அகாரணத்தால் இந்நூல் சிறப்பிலதாகாது. அறிவின் முதற்பற்றுக்கோடு எல்லை யுணர்ச்சியாம். புட்களின் செயலை மேற்கொண்டு இறுதியில் இந்திரன்போன்று மாழாந்து அபகீர்த்திபடைத்து ஆயிரங்கண்ணனாவதைப் பார்க்கிலும் நமக்குரிய இவ்வுலகிலேயே உறுதியாய் ஒழுகுதல் சாலவும் நன்று. ஆன்மதத்துவ நூலின் மற்றொரு பயன் நன்மையாக்கமே. நூல்களனைத்திற்கும் ஆதாரமான சிறந்த இன்றியமையாத உண்மைகளில் நாம் பழக்கமுற அது பயிற்றுகின்றது. ஆன்மதத்துவ நூல் தர்க்க* நூல் போலக் கேவலம் கருவி நூலன்று; மற்று, ஒருமனிதனது ஆன்மா அவனது முகவெளிக் குறிப்பிற்குள்ளும்* இரத்த மாம்ச பிண்டத்திற்குள்ளும் †பொதிந்து கிடந்தும், மாறுபாடனைத்தையுங் கடந்தும், ஒரு தன்மைத்தாய் அவைகளின் நிலைமைபெற்ற இனக்குறியா மாறுபோல, தோற்றமனைத்தினும் உட்பதிந்து கிடக்கும் அடிப்படையானதும் சாரமானதுமான உண்மையைப் பற்றிய நூலேயாகும். தனித்தனி நூல்களாற் காட்டப்பெற்ற முக்கிய மாறுபாடுகளின் பின்னர்ச் செல்வுழி நாமடைவதும் இஃதே. இது நிலத்திணைப் பொருணூலன்று; உடல் நூலு மன்று, பௌமிய நூலுமன்று, வான நூலுமன்று, இரசாயன சாத்திரமுமன்று, மனித நூலுமன்று, அறிவின் தனிப்பகுதிகள் ஒவ்வொன்றும்

தங்கண் ஒருவகை நோக்கமாகவே காணப்படும்; எங்கும் பரவி, எவற்றையும் தம்மகத் தடக்கி, இயலுறூஉம் சக்திகள், ஆற்றல்கள், சாரங்கள் ஆகிய இவற்றின் தொகுதியே ஆன்ம தத்துவநூலின்பாற் படும். வாழ்க்கையனைத்திற்கும் இதுவே முழுமுதன் மூலம். மேலும், உள்பொருளனைத்தும் தன்மயமான பேரறிவினது வெளிவிரிவாகையால் (ஏனெனில் உள்ளுறை அறிவின்றேல் இவ்வவுலகம் ஒழுங்குருவாகாது கலைந்துருவாயன்றோ விருக்கும் !) நந்தம் தனித்தனி சிற்றறிவினால் அறியக்கூடியமட்டில், ஆன்மதத்துவநூல் அகண்டமான ஒழுங்கிய லுலகின் பேரறிவுணர்ச்சியா மென்பது போதரும். ஆகையினாலே தான் **அரிஸ்டாடில்** வெகுகாலத்திற்கு முன் குறித்தாங்கு, இது கடவுளியல் நூலோடு ஒருமைப்பட்டுளது. மெய்யாகவே, கடவுளைத் தனித்த சுயம்புவாயும், சுயசக்தி யுடையதாயும், தன்மயமாயுமுள்ள அனந்த ஞானவடிவெனக் கருதுதலே இக்காசினியை நன்கு நமக்கு விளக்கும். இக்கருத்தே நேரிய சிந்தனையின் ஒரே பற்றுக்கோடெனப் **பிதாகோரஸ்ப்** புலவர் முதற்கொண்டு ஹேகேல் வரையிலுமுள்ள சிறந்த தத்துவ வுணர்ச்சி வல்லோரனைவராலும் உறுதியாய்க் கொள்ளப்பட்ட நியாயம். இனி, இக்காலத்தில் விசேஷமாக ஆன்ம தத்துவநூலை யெவ்விதத்தினும் பயிலவேண்டும். ஏனெனில் வெளிற்றோற்றும் புறப்பொருள்களையே ஒருதலைச் சார்பாய்த் தவறாகச் சாரும் மனப்பயிற்சியோடிணைந்த, பிரகிருதி சாத்திரத்திற்செவ்விய புதுப்புதுக்காட்சிகளின் தொடர்ச்சியினாலெய்தும் அதிசயத்தின் பயனால் இக்காலத்திற் கேவலம் பிரகிருதிசாத்திரத்திலேயே அறிவுடைமை காணப்படு மென்றும், முக்கியமான முடிவுரைகளனைத்தையும் ஒரே யடியிற் காட்டும் மெய்யான மந்திரக்கோல் **பொதுப்பொருள் நிறுவலா**மென்றும் மக்கள் சிலர் கருதுவாராயினர். இவ்வாறு கருதுதல் புறப்பொருண் மேற்கோட் பைத்தியமாகும். ஏனெனில், ஒரு புறத்து நூல்களனைத்துஞ் சார்ந்துள அடிப்படையாயினவும், மிகவின்றியமையாவாயினவுமான உண்மைகள் பொதுப் பொருள் நிறுவுதற்கு முன்னரே நமது மனத்தைப் பெரிதும் கவர்கின்றன. மற்றொரு புறத்திற் பிரகிருதி சாத்திரங்கள் சாதாரணமாய்க் காலக்கிரமமான ஒழுங்கிணக்கங்களை விரித்துரைக்கின்றன. இவற்றை நுனிப்புன்மேய்ச்சலாகக் காண்பவர் காரணங்களாக மருளினும் மருளுவர். அந்நூல்களின் விதியெனப் பட்டனவெல்லாம் செய்ம்முறைதாமே. அவை தமது எல்லையைக் கடந்து சென்றாலன்றிக்கணக்கிட முடியாத அவற்றின் நிமித்தகாரணமன்றோ, என்றுமெங்கும், நாம் கடவுளென்று கூறும், தனித்து நின்று எங்கணும் விளங்கும், எவற்றையும் படைக்கவல்ல பேரறிவாம். பத்தியுள்ள முதுயவனகவி யொருவர் பாடினவாறு இவ்வறிவின் முளைகள்தாமே நாமனைவரும். பெரியமுனிவர்கள் முன் போதித்தவாறு யாம் வசிப்பது மதன்கணே, இயங்குவது மதன்கணே, உயிர்த்திருப்பது மதன்கணே. என்னை ?

" ஆவதும் பரத்துளே யழிவதும் பரத்துளே
போவதும் பரத்துளே புகுவதும் பரத்துளே
தேவரும் பரத்துளே தெய்வமும் பரத்துளே
யாவரும் பரத்துளே யாமுமப் பரத்துளே "

என்ற பாவலர்வாக்கும் பொய்யாமோ? இளைஞனொருவன் கலாசாலைகளில் தகுதியாக நாடத்தொடங்கவேண்டிய ஆன்ம தத்துவ நூலெல்லாம், சாரமும் நியாயமுமுள்ள கடவுள் நூலும், பயபக்தியோடு கூடிய ஆராய்ச்சியுமேயாம். ஆனால் உண்மையும் ஆண்மையும் பொருந்தப்பெற்ற வாழ்க்கையில் அனுபவத்தினன் மட்டுமே அவன் இவ்விரண்டையும் காணலியலும். அன்னையின் மார்பில் இளைப்பாறியுறங்கும் குழவிபோன்று அவைகளடங்கிய கோட்பாட்டில் உள்ளமியைந்து அமர்ந்தபோதே அவ்விரண்டையுந் தான் கண்டதாக அறிவான்.

ச. கி. சுந்தராசாரியன்.

---

## கல்லாட வாராய்ச்சி.

(393 - ஆம் பக்கத்தொடர்ச்சி.)

திருக்குறள் அரங்கேற்றிச் சில்லாண்டு கழிந்த பின்னர்ப் பாண்டியன் நெடுஞ்செழியன் காலத்திற் கற்புக்கரசியாய கண்ணகியின் கணவன் கோவலன் சிலம்புவிற்க மதுரைத் தெருவில் திரிதரும் பொழுது அரசன் தேவியின் சிலம்பினைக் கவர்ந்த கள்வனென வீணே பழிகூறப்பட்டு அரசனது கொலைத்தொழின் மாக்களால் வாளாலெறியுண்டிறந்தான். இதனை யறிந்த கண்ணகி வெகுளி மேலிட்டு நாண் துறந்தோட அரசன் பாற்சென்று அவனது அறமின்மையை வலியுறுத்தி அவனை அறக்கூற்றிற் கிரையாக்கினள். அதான்றியும் சினமொருவாற்றானுந் தணியாது தனத்தி லொன்றைத் திருகியெறிந்து மதுரையம்பதியைச்செந்தீக்கு விருந்திட்டனள். இவ்வாறு அரசியல் பிழைத்தலாற் பாண்டிநாடு மழை வளங்குன்றிப் பன்னிரு யாண்டு வற்கடஞ்சென்றது. புலவர்களும் நீரில்லா வாவியை விட்டுப் பறவைகள் அகல்வனபோற் பாண்டி நாட்டைத்துறந்து பிறநாட்டிற் றிரிதந்து மழைவளஞ் சுரந்தபின் பாண்டிநாடெய்தினர். அப்போழ்து அகப்பொரு ளாராய்ச்சி மிகக்குன்றி யிருந்தது.

அத்தருவாயில் அரசன் கவலுற்றிருந்தபோது சோமசுந்தரக்கடவுள் கருணைகூர்ந்து தாம் இறையனாராயிருந்தியற்றிய களவிய லென்னும் பெயர்

பெறும் இறையனாரகப் பொருளை வெளியிட்டனர். *அதன் முதற்சூத்திரம்,

" அன்பி னைந்திணைக் களவெனப் படுவ
தந்தண ரருமறை மன்ற லெட்டனுட்
கந்தருவ வழக்க மென்மனார் புலவர்."

என்பதாம். இறையனாரகப் பொருள் ஆலவாயடிகளாலேயே யியற்றப்பட்ட தென்பதற்கு,

"உலகிய னிறுத்தும் பொருண்மர பொடுங்க
மாறனும் புலவரு மயங்குறு காலை
முந்துறும் பெருமறை முளைத்தருள் வாக்கா
லன்பினைந் திணையென் றறுபது சூத்திரங்
கடலமு தெடுத்துக் கரையில்வைத் ததுபோற்
பரப்பின் றமிழ்ச்சுவை திரட்டிமற் றவர்க்குத்
தெளிதரக் கொடுத்த தென்றமிழ்க் கடவுள்" (3-ம் அகவல்.)

என்பதே கரியாம். முன்னர்ச் சங்கப்புலவர் நாற்பத்தொன்பதின்மரே யென நிறுவியபோது காட்டிய சிலவடிகளும் களவியலின் பெருமையைக் கூறும்.

இறையனாரியற்றிய களவியலுக்கு உரைகண்டவர் நக்கீரரென்று ஒரு சாராருங் குமாரக்கடவுளுடைய அவதாரமாகிய உருத்திரசன்மரென மற்றொரு சாராருஞ் சொல்வர். பொதுவாய் இறையனாரகப் பொருளுரை நக்கீரரதென்றே கொள்ளுப பலர். இக்கொள்கை மிகவுந்தவறுடைத் தெனத் தோன்றுகின்றது. முதற்கட் களவியல் உரைச்சிறப்புப் பாயிரத்தில் நக்கீரர் படர்க்கை முகத்தாற் கூறப்பட்டமையின் அப்பாயிரத்திற்கேனும் அவர் ஆசிரியரல்லரென்பது போதரும்; மேலும் அப்பாயிரத்திலேயே களவியலுக்குப் பொருள்கண்டார் உருத்திர சன்மரெனச்சிலர் கூறுமிற்பரெனக் காட்டி அது தவறென்று சிலநியாயங்களைச் சுட்டி நக்கீரரோ மெய்யுரை கண்டாரெனப் பின்னர் வலியுறுத்தப்படுதலானும் உரைசெய்தவர் இன்னாரென ஒருதலையாய்த் துணிதல் அக்காலத்திலேயே முடியாமையாயிருந்தது. கடைச்சங்கத்து வரலாற்றினை வலியுறுத்திக் கூறுதற்குக் கல்லாடத்தினுஞ் சிறந்த ஆதிநூல்களில் இறையனாரகப்பொருளுரையாசிரியர் வணிகர் மரபிற்றோன்றிய முருகக்கடவுள தவதாரமான வுருத்திரசன்மரெனவே தோன்றுகின்றது. இதற்காதாரம்:

" மணிக்கா லறிஞர் பெருங்குடித் தோன்றி
யிறையோன் பொருட்குப் பரணர்முதல் கேட்பப்

* இறையனா ரகப்பொருளின் வரலாற்றினை விரிவா யறியவிரும்புநர் அக்களவியலுரையுட் பரக்கக்காண்க.

பெருந்தமிழ் விரித்த வருந்தமிழ்ப் புலவனும்
பாய்பா ரறிய நீயே யாதலின்" (கல்லாடம் - முருகர்துதி.)

என்பதாம். உருத்திரசன்மர் மூங்கைக் குழவியென்பதற்கு ஆதியாய நூல்களுள் ஆதாரங்கிடையா. இறையனாரகப் பொருள் உரைச்சிறப்புப் பாயிரத்தில் மூங்கையெனப் பகரப்பட்டிருக்கின்றதெனின் அப்பாயிரம் செய்தார் நக்கீரர்பரம்பரையி லுதித்த வொருவர் நக்கீரருக்குப் பெருமை வாய்க்க அவ்வுரைக்கு நக்கீரரே உரையாசிரியரென முரண்வாதத்தாற் சாதித்ததாகத் தோன்றுகிறது.

கண்ணுதற் பெருமான் தமது பேரருளாற் பாண்டி நாட்டுள்ள மன்பதைகள் இம்மை மறுமை யின்பங்களைத் துய்த்து முத்திவழி மறவாதிருக்கப் பல திருவிளையாடல்களைப் புரிந்தார். திருவிளையாடலெனும் பதத்திற்கு ஆன்றோர் முத்திச்செல்வத்தினை விளக்கும் லீலையெனப் பொருள்கூறுவர். அகப்பொரு ளமுதாகிய திருச்சிற்றம்பலக் கோவையாரை கற்போர்க்கு எவ்வாறு திருச்சிற்றம்பல முடையாரது பேரருள் தொனிக்கின்றதோ, அவ்வாறே கல்லாடத்தை வாசிப்போர்க்கு கூடல்நாயகன் பேரருள்கூடும். செவியுணவிற்சிறந்த இந்நூலின் அருட்டிறத்தைப் பலகாலு மந்நூலினைப் பயின்று தெளிந்திடுக.

சிவபெருமானது உண்மையடியார்கள் திருமாலினிடத்து அபராதஞ்செய்யார். அலைகடற் றுயில்வோனது மாட்சிமையை மணிவாசகப் பெருமான் பரசிவப்பிரமத்தின் கரை கடந்த பெருமையை அளத்தற் கொரு கருவியாகக் கொண்டாரே யொழியத் திருமாலைப் பழித்தன ரல்லர். திருமால் பரசிவத்தின் அருட்சத்தி யாதலின் அவ்வை முதலிய பெரியோர் சிவபெருமானை முழுமுதற் கடவுளாக் கொண்டாராயினும் சிவபெருமானை நோக்கித் தவஞ் செய்துமுத்தியெய்த எண்ணுநரைநோக்கி "திருமாலுக்கடிமை செய்" என்று கூறியுள்ளார். ஆதலான் திருமாலை சிவப்பிரகாசச் சுவாமிகளைப்போல் மால்கொண்டு, வீணே நிந்திப்பவர் உண்மைச் சிவநேச முடையாரல்லர். வாதவூரடிகள் சிவபெருமானது அளக்கொணுப் பெருமையை ஒரு வாற்றான் சிறிது அளக்க முயன்றபோது அதனையளத்தற்குத் தாங்கொண்ட கருவியாகிய மாயோன்புகழை எவ்விதவிழுமம் வாய்க்க விரித்தா ரென்பது, "போற்றித் திருவகவ" லின் முதலில்,

"நான்முகன் முதலா வானவர் தொழுதெழ
வீரடி யாலே மூவுல களந்து
நாற்றிசை முனிவரு மைம்புலன் மலரப்
போற்றிசெய் கதிர்முடித் திருநெடு மாலன்
றடிமுடியறியு மாதரவதனிற்
கடுமுர ணேன மாகி முன்கலந்

தேழ்தல முருவ விடந்து பின்னெய்த்
தூழி முதல்வ சயசய வென்று
வழுத்தியுங் காணு மலரடி யிணைகள்"

எனக்கூறினமையி னினிது விளங்கும். அன்பு பெருக்கிற் பல்லாற்ருனும் வாதவூரடிகட்குச் சமானராகிய கல்லாடரும் ஆழிவள்ளலது பெருமையைச் சிவபெருமானது புகழளக்கு மொப்பற்ற கருவியாகக் கொண்டார். ஐந் தாம் அகவலில்,

" இரண்டுட லொன்ருய்க் கலந்துகண் படாம
லளவியன் மணநிலை பரப்பும் காலங்
கலைகண் கடந்த காமக் கடலுட்
புன்னுனிப் பனியென மன்னுத லின்றிப்
பீர மலர்ந்த * வயாவு நோய் நிலையாது
வளைகாய் விட்ட புளியருந் தாது
செவ்வாய் திரிந்து வெள்வாய் பயவாது
மனைப்புகை யுண்ட கருமணிடந்து
பவள வாயிற் சுவைசா ணுது
பொற்குட முகட்டுக் கருமணி யமைத்தெனக்
குங்குமக் கொங்கையுந் தலைக்கண் கருது
மலர வவிழ்ந்த தாமரைக் கயலெனப்
வரிகொடு மதர்த்த கண்குழி யாது
குறிபடு திங்க ளொருபதும் புகாது
பொன்பெய ருடையோன் றன்பெயர் கெடுப்பச்
தூணம் பயந்த மாணமர் குழிவிக்
கரக்கர் கூட்டத் தமர்விளை யாட
நெருப்புமி ழாதி யீந்தரு ணிமலன்"

என்னும் பாவடிகள் விண்டுவின் பல அவதாரங்களினும் ஓர் ஒப்பற்ற கார ணத்தால் மிகுந்த பெருமை வாய்ந்துள்ள உக்கிர நரசிம்மாவதாரத்தை உச்சிதமாய்ப் புகழ்ந்து பரமசிவத்தின் பேராற்றல் பேரருள் முதலியவற் றை ஒரு வாற்ருல் விளங்கவைக்கின்றன. முழுமுதற்கடவுளது இன்றியமை யா இலக்கணங்களுள் யோனிவாய்ப்பட்டு உதிக்காமை யொன்ரும். பிறப் பின்மைகூறவே யிறப்பின்மையு மொப்பமுடியும். 'தந்தை பிறந்திறவாத் தன்மையினு' லென்ருர் கவிகாளமேகமும். தொண்ணூற்றைந்தாம் தொ ண்ணூற்றேழாம் அகவல்களுட் பாரத இராமாயண வரலாற்றினைச் சுருங்க அணிபெறச்சொல்லிக் கண்ண பிரானுக்கும் ஸ்ரீராமபிரானுக்கும் சிவபெரு மான் புரிந்த பேரருள் கூறப்பட்டிருக்கின்றது.

(இன்னும் வரும்.)

எஸ். ஏ. திருமலைக் கொழுந்துபிள்ளை.

---

* மசக்கை.

# முதலாழ்வார்கள் வைபவம்.

ஸ்ரீ பாஞ்சசந்நியாமிச பூதரான பொய்ழ்கையாழ்வார், காஞ்சிபுரத்தில் திருவெஃகா என்னுந் திவ்விய தேசத்தில், பொற்றாமரைப் பொய்கையில், காஞ்சன பத்ம சர்ப்பத்தில், துவாபரயுகம் பிறந்து எட்டிலக்ஷத்சருபத் திராயிரத்துத் தொள்ளாயிர மாகிற ஆண்டின் மேல் நிகழ்ந்த சித்தார்த்தி வருடம் ஐப்பசிமாதம் அஷ்டமித்திதியோடு கூடின செவ்வாய்க்கிழமை திருவோணநாளில், திருவவதாரஞ் செய்தருளினர். உடனே, கச்சித்திருமாலான மணிவண்ணன் எழுந்தருளி, ஆழ்வாரைக் கரதலத்தெடுத்து, உச்சிமோந்து, மார்புறத்தழுவிப் பின்பு பிராட்டி கையிற் கொடுத்தனன். எம்பெருமாட்டியும், ஆழ்வாருக்கு ஸ்தந்நிய பானஞ் செய்வித்து விட்டவளவில், எம்பெருமான், ஆழ்வாருக்குப் 'பொய்கை யோகி' எனத்திருநாம மிட்டு, அவரைநோக்கி, "ஆழ்வீர்! நீர் வேதசாரார்த்தங்களைச் செந்தமிழ்ச்செய்யுளில் அமைத்துப்பாடி அச்செய்யுள்களாலும் நியாசவித்தையாலும் சம்சாரி சேதனர்களைத் திருத்தி நமக்கு ஆட்படுத்தும் வண்ணம் திவ்வியதேச சஞ்சாரஞ்செய்து நிற்றிர்" என நியமித்தருளினன்.

ஸ்ரீமந் நாராயண னுடைய கௌமோதகி என்னும் கதாயுதத்தின் சக்தி சுவரூபியாகும் முநிவர் தலைவரான பூதத்தாழ்வார் கீழைக்கடலின் கரையில் திருக்கடன் மல்லைஎன்னுந் திருப்பதியில், மணமலிந்ததோர் மாதவி மலரில், துவாபர யுகத்தில், பொய்கையாழ்வார் அவதரித்த பிற்றை நாளில், அவிட்ட நக்ஷத்திரத்தில் அவதரித்தருளினர். வேதமே உருவெடுத்து வந்தாற்போன்ற இவரை, அத்திருக்கடன் மல்லை யெம்பெருமான் வாரியெடுத்து மார்பில் அணைத்துக்கொண்டு சென்று, உலகமாதாவாகிய பெரிய பிராட்டியாரிடத்திற் கொடுக்க, பிராட்டியாரும் திருமுலைப்பாலுண்பித்து விட்ட வளவில், இவர்க்குப் 'பூதயோகி' எனப்பெயர்தந்து, இவரைக் கண்ணுற்று, "ஆழ்வீர்! நீர் ஆரணசாரங்களை அருந்தமிழ்ப் பாக்களில் அமைத்துப்பாடி அப்பாக்களைக் கொண்டும் நியாச வித்தையை உபதேசித்தும் உலகத்தவரை உய்விக்கும்பொருட்டு பூசஞ்சாரஞ் செய்து திரிவீராக" என ஏவியருளினன்.

எம்பெருமானுடைய நாந்தகமென்னும் வாளாயுதமான நித்தியசூரியின் அமிசபூதரான பேயாழ்வார் மேலை ஆழ்வார்கள் இருவரும் அவதரித்த அந்தச் சித்தார்த்தி வருடம் ஐப்பசி மாதம் சதய நக்ஷத்திரத்தில் திருமயிலை மாநகரில் ஆதிகேசவப் பெருமாள் கோயில் திருக்கிணற்றிலே உண்டானதொரு செவ்வல்லி மலரிலே திருவவதரித்தனர். அதுகண்ட கேசவப் பெருமான் அவரைத் திருக்கைகளால் தழுவி யெடுத்து உலகுக் கெல்லாம்

ஓரன்னையாகிய எம்பெருமாட்டியார் திருக்கரத்திற் கொடுத்து ஞானப்பாலூட்டுவித்தனர். இவரும் பெருமாளையும் பிராட்டியையும் திருவடி தொழுது நின்றனர். இவர் விண்டு பத்தியில் விஞ்சினவராய், இவர்க்குப் பகவதநுபவத்தால் வந்த பாரவசியம் ஏனை யாழ்வார்களிடத்திற்காட்டில் மேலிட்டிருத்தலால், பெருமானும் இவர்க்குப் 'பிராந்தியோகி' என்று நாமகரணஞ் செய்து இவரைநோக்கி, "ஆழ்வீர்! நீர் மாமறையின் சாரங்களைவண்டமிழ்க் கவிகளிலமைத்துப் பாடி, அக்கவிகளின் மூலமாகவும் நியாசவித்தையின் மூலமாகவும், பக்த சேதனர்களைத் திருத்தி அவர்கள் நமது திருவடிகட்கு ஆளாம்படி செய்யுமாறு, நாம் உகந்தருளின ஊர்கள் தோறும் சஞ்சரித்து நிற்கக்கடவீர்" என விடை கொடுத்தருளினன்.

உலகினர் பிறக்கும் வழியாக வன்றியே அப்பிராகிருதராய் அவர்களில் அவதரித்தவர்களான இந்தயோகிகள் மூவரும், எம்பெருமானுடைய நிர்ஹேதுக் கடாக்ஷத்தால், இராஜச தாமச சத்வ மென்னும் முக்குணங்களில் முன்னிரண்டையும் முனிந்து, சத்வமாகிற ஒன்றிலே ஒன்றிநின்று, ஞான பக்திவைராக்கியங்களை உடையவர்களாய், அன்ன பானீயங்களின்றியே, எம்பெருமானுடைய திருவடிகளிலே மெய்யன்பு பதித்து வர்த்தித்திருந்தனர். இருக்குங் காலையில், இல்லறத்தாருடைய உறவு தங்களுக்குப் பொருந்தாமையாலே, இவர்கள், ஒருநாள் இருந்த விடத்தில் மறு நாள் இராமல், திவ்விய க்ஷேத்திரங்கள் தோறும் சஞ்சரித்து வந்தனர்கள்.

இவர்கள், ஒருவரை யொருவர் அறியாமல், தனித்தனியே சஞ்சரித்து வருங்கால், ஸர்வேசுவரனும், இவர்களைக் கொண்டு உலகத்தை உய்விக்கத் திருவுள்ளங்கொண்டிருப்பவனுகையால், இம்மூவரும், ஒருவரை யொருவர் அறியாமல், பெண்ணையாற்றின் தென்கரையில் வாமன க்ஷேத்திரமாகிய திருக்கோவலூரில் வந்து தன்னைச் சேவிக்கும்படி இவர்களுக்குப் புத்திப் பிரதானம் பண்ணினுன். இவர்களும் அங்ஙனமே அத்திருப்பதியை அடைந்து எம்பெருமானைச் சேவித்து வெவ்வேறிடங்களில் இருந்தனர்கள்.

சூரியன் அஸ்தமனமான பிறகு முதன்முதற் பொய்கை யாழ்வார் ஒரு ஸ்ரீ வைஷ்ணவருடைய திருமாளிகையிற் சென்று அம்மாளிகையின் இடைகழியின் மீது சயனித்திருந்தனர். பின்னர்ப் பூதத்தாழ்வார் கண்வளர்தற்கு இடந்தேடிக் கொண்டு பொய்கையாழ்வார் பள்ளிகொண்டிருக்கும் இடத்தையடைந்து, "அடியேன் சயனித்தற்கு இம்மாளிகையிற் சற்று இடங் கிடைக்குமோ?" என்று வினவினுர். பொய்கையாழ்வார் அது கேட்டு, "சுவாமீ! இங்கே, இவ்விடைகழியில் ஒருவர் படுக்கலாம்; இருவர் இருக்கலம்; தேவரீர் எழுந்தருளினுல் இருவரும் இருக்கலாகும்" என விண்ணப்பஞ் செய்தனர்.. அங்ஙனமே அவ்விருவரும் அங்கு இருந்து ஒருவரை

யொருவர் உசாவிக்கொண்டிருக்கும் போது, பிராந்தியோகிகளான பேயாழ்வாரும் அவ்வாறே இடந்தேடிக்கொண்டு அந்தத் திருமாளிகைக்கு வந்து "சயனித்துக்கொள்ள இடங்கிடைக்குமா?" என்று கேட்க, அவர்கள், "சுவாமீ! இவ்விடம் ஒருவர் படுக்கலாம்; இருவர் இருக்கலாம்; மூவர் நிற்கலாம்" எனக் கூறினார்கள். கூறவே, இவரும் உள்ளுறச் சென்று, மூவருமாக நின்று கொண்டு அளவளாவி யிருந்தனர்.

அவ்வளவிலே திருக்கோவலூர் எம்பெருமானும் பேரிருளும் பெருமழையும் உண்டாக்கித், தானும் அவ்விடைகழியிற் சென்று, அவர்களுக்கு அதிக நெருக்கம் உண்டாகும்படி செய்தருளினன். ஆழ்வார்கள் மூவரும் "முன்னில்லாத நெருக்கம் இப்பொழுது உண்டாய காரணமென்னே? நம்மையொழியவும் இவ்விடைகழியைப் பற்றிநிற்பார்கள் உண்டோ?" என்று அறியும் பொருட்டு "ஞானச் சுடர் விளக்கேற்றி" யும், "உணர்வெனும் ஒளிகொள் விளக்கேற்றி" யும், "வெய்யகதிரோன் விளக்கேற்றி" யும் பார்த்தனர். ஸ்ரீமந் நாராயணனுடைய மைப்படி மேனியையும் செந்தாமரைக் கண்ணையும் நெஞ்சென்னும் உட்கண்ணாலே கண்டநுபவித்து, அந்த அநுபவத்தால் உண்டாகிய அன்பின் மிகுதியாலே, பொய்கையாழ்வார், பிறப்பென்னும் பெரும்பிணிக்குப் பரமௌஷதமும், சமுசார சாகரத்தைக் கடக்கலாவதான தெப்பமும், எம்பெருமானுடைய திவ்ய குணநுபவரூபமுமாய

"வையந் தகளியா வார்கடலே நெய்யாக
வெய்ய கதிரோன் விளக்காகச்—செய்ய
சுடராழி யானடிக்கே சூட்டினேன் சொன்மாலை
யிடராழி நீங்குகவே யென்று"

என்று தொடங்கி ருக்வேத சாரமான முதற்றிருவந்தாதியும்;—பூதத்தாழ்வார் பரமபதசோபானமே என்னலாவதாய்

"அன்பே தகளியா வார்வமே நெய்யாக
வின்புருகு சிந்தை யிடுதிரியா—நன்புருகி
ஞானச் சுடர்விளக் கேற்றினே னாரணர்க்கு
ஞானத் தமிழ்புரிந்த நான்"

என்றாரம்பித்து யஜுர்வேத சாராமிசமான இரண்டாந் திருவந்தாதியும்;—பேயாழ்வார் பக்திரசம் முழுகுவதாய் எம்பெருமானுடைய ஸ்வரூபரூபகுணாதிகளைப் பிரதிபாதிப்பதாய்,

"திருக்கண்டேன் பொன்மேனி கண்டேன் றிகழு
மருக்க னணிநிறமுங் கண்டேன்—செருக்கிளரும்
பொன்னாழி கண்டேன் புரிசங்கங் கைக்கண்டேன்
னென்னாழி வண்ணன்பா லின்று"

என்றெடுத்துச் சாமவேதசாரமான மூன்றும் திருவந்தாதியும் ஆகிற திவ்விய பிரபந்தங்களைச் சேதனர் உய்ந்துபோமாறு ஞானத்தமிழாக அருளிச்செய்து உலகத்தை வாழ்வித்தருளினார்கள்.

அப்போது பெருமாள் "நீங்கள் இப்போது பாசுரமிட்ட இத்திருவந்தாதிகளை அநுசந்தானம் பண்ணுமவர்கள் எனக்கு ஆவிபோல்வாராய் என் திருவடி யடைவர்கள். இனி உங்கட்கு வேண்டுமான வரங்கேளுங்கள். வேண்டினதை வேண்டினபடியே தருகிறேன்" என்றருளிச்செய்ய, ஆதி யோகிகளான இம்மூவரும், "எம்பெருமானே! எளிதில் வந்து நீ ஏழையோங்களை ஆட்கொண்டு திருவடி யளித்தனை இதனிலும் ஏற்றமான பிறிதொன்று எங்கட்கு என்னவேண்டும்? பரமபதத்தைச்சென்று சேர்வதே நாங்கள் வேண்டுகின்றவரம்" என்றனர்கள். அதுகேட்ட பரந்தாமன், "பரமபதம் உங்கட்குக் கைவயமான தொன்றன்றோ? உங்களைக்கொண்டு உலகத்தை உய்விக்க வேண்டுகின்றனன். ஆதலால் இன்னும் சிலகாலம் நீங்கள் இவ்வுலகில் வசித்து இவ்வுலகினரை நல்வழிப்படுத்தி ஒப்புயர்வில்லாத நம்பதம் எய்தும்படி செய்தல்வேண்டும்" எனப்பணித்தான். திரிமூர்த்திகளைப்போல் பவரான ஆழ்வார்கள் மூவரும் அதற்கியைந்து மாயப்பெரும் பிணியைப் போக்கி, மெய்ஞ்ஞானசாரத்தை வீக்கி, அனைவரையும் அரிநாமத்தைச் சொல்லுமவராக்கி, உலகத்தைத் திருத்திப் பலகாலம் போக்கிப், பின்னர் என்று முலவாத பேரின்ப வீட்டை எய்தி இன்புற்றார்கள்.

(இன்னும் வரும்.)

திருமணம் - செல்வகேசவராய முதலியார்.

---

## நீர்க்கோட் கருவி. *

'நீர்க்கோட்கருவி' என்பது இருபுறமும் வாய்திறந்துள்ளதோர் வளைந்த குழாய். அஃது உருவத்தில் அடிகுறுகிய பகரத்தையாவது, U. V. என்னும் ஆங்கில அக்கரங்களில் யாதானு மொன்றையாவது, ஒத்திருக்கும். இரண்டு நேர்க்குழாய்களை † இந்தியக்குறுங்கிடைக் குழாயால் மேற் சொல்லியபடி பிணைத்துக் கொளினும் அமையும். இக்குழாயின் ஒருகால் சாதாரணமாய் மற்றையதினும் நீண்டிருக்கும். இதனை 'நீர் வாங்கிக்குழாய்' என்றும் கூறுவார்கள்.

ஒரு நாற்காலியின் மேல் ஜலமுள்ள பாத்திரமொன்று வையுங்கள். பிறகு மேற் சொல்லிய நீர்வாங்கிக் குழாயில் ஜலத்தை நிறைத்து, அதன் வாய்ப்புறங்களை விரலால் மூடிக்கொண்டே அக்குழாயைக் குப்புறக்கவிழ்த்

* The Syphon. † India rubber.

துக், குறியகாலின் வாய்ப்புறத்தை நாற்காலி மேலுள்ள பாத்திரத்தின் சலத்தில் அமிழ்த்தி விரலை யெடுத்து விடுங்கள். உடனே நெடிய காலின் வாய்ப்புறத்தின் வழிபாகச் சலம் இடைவிடாமல் விழத்தொடங்கும். அவ்வாறன்றி, குழாயில் ஜலத்தை நிறைக்காமலே அதனைக் குப்புறக்கவிழ்த்துக் குறிய காலின் வாய்ப்புறத்தைச் சலத்தில் அமிழ்த்தி, நெடிய் காலின் வாய்ப்புறத்தில் வாயை வைத்துக் குழாயிலிருக்கும் வாயுவை உறிஞ்சி விட்டாலும் உடனே அவ்வாய்ப் புறத்தினின்றும் ஜலம் இடைவிடாமல் விழத் தொடங்கும். ஆனால் வெளியிலுள்ள நெடிய காலின் வாய்ப்புறம் பாத்திரத்திலுள்ள நீரின் மட்டத்திற்கு மேற்படும்படி குழாயை நிறுத்தினாலும், குறிய காலின் வாய்ப்புறம் பாத்திர நீர்க்குள் அமிழாவிட்டாலும் உடனே அவ் இடைவிடா நீர்வீழ்ச்சி நின்று போவதைக் காண்பீர்கள்.

மேற் சொல்லியவற்றால், நெடியகாலின் வாய்ப்புறமாக நீர் வீழ்ச்சி யுண்டாதற்கு வேண்டிய **நிபந்தனைகள்** இவை யென்பது விளங்கும். **முதலாவது, குழாய் வாயு நீங்கியிருத்தல்வேண்டும்.** இதற்காக, அக்குழாயில் ஜலத்தை நிறைக்கவாவது வேண்டும்; அல்லது சிறிய காலின் வாய்ப்புறம் பாத்திரத்திலுள்ள நீரில் அமிழ்ந்து கொண்டிருக்க நெடிய காலின் வாய்ப் புறத்தில் வாய் வைத்து உள்ளிருக்கும் வாயுவை உறிஞ்சுதலாவது வேண்டும். **இரண்டாவது, குழாயின் வாய்ப்புறங்கள் பாத்திர நீர்மட்டத்திற்குக் கீழாகவே இருத்தல் வேண்டும்.** இதற்காகவே குழாயின் ஒரு கால் மற்றைபதினும் நீண்டிருக்க வேண்டு மென்றதும், அவ்வாறு நீண்டுள்ள கால் வெளிப்புறத்திருக்க வேண்டு மென்றதும் என்பதறிக. குழாயின் ஒரு காலின் வாய்ப்புறத்தை நீருள்ளும் மற்றொருகாலின் வாய்ப்புறத்தை வெளியிற் பாத்திரத்து நீர் மட்டத்திற்குக் கீழாகவும் நிறுத்த முயன்று கொண்டோமானாற் கால்கள் எப்படியிருப்பினும் எவ்விடத்திருப்பினும் அவசியமில்லை.

முதலாவது, குழாயினுள் வாயு ஏன் இருத்தல் கூடாது? இதை ஆராயுமுன் ஒரு சிறு சோதனை செய்யவேண்டும்; ஒரு வேளை செய்து மிருப்பீர்கள். மை நிறைய இருக்கும் கூட்டின் மேல் வாயு புகாத வண்ணம் ஒரு காகிதத் துண்டைப் பரப்பிக் கூட்டைக் கவிழ்ப்போமாயின்மை சிறிதும் விழாதபடி அடியிலுள்ள வாயு காகிதத்துண்டை அழுத்துவதைக் கவனிப்பீர்கள். இது போலவே, **'முப்பது அடி'** உயரத்திற்கு **அதிகப்படா**மல் அவ்வளவு பெரிய பாத்திரத்தை எடுத்துக் கொண்டு நிறைய நீர்விட்டு வாயு சிறிதும் உட்புகாதபடிகாகித அட்டையால் மூடிக்கவிழ்ப்போமாயின் அவ்வளவு நீரின் பளுவையும் காகித அட்டையின் வெளிப்புறத்திலுள்ள வாயு தாங்கிக் கொள்ளும்! இதனால், வாயுவின் அழுத்தல் வலி ஏறக்குறைய முப்பதடி உயரமுள்ள நீரின் அழுத்தல் வலிக்குச் சரியாயிருக்கிறதென்று தெரியவருகிறது.

குழாயிலுள்ள வாயுவை நீக்காவிடின் பாத்திரத்துள் அமிழ்த்தின வாய்ப்புறத்தின் அகத்திலும் புறத்திலும் வாயுவிருந்து நீரைச்சமமாக அழுத்துவதனாற் குழாய்க்குள் நீர் எழாது என்பது வெளிப்படை. ஆகவே, மற்றைய வாய்ப்புறத்தினின்றும் நீர் வீழ்ச்சி எவ்வாறு உண்டாம்? ஆதலால் குழாயிலுள்ள வாயுவை நீர் நிறைத்தலாலாவது உறிஞ்சலாலாவது நீக்கவேண்டும்.

இரண்டாவது, குழாயின் வாய்ப்புறங்கள் ஒன்று நீருள்ளும் மற்றொன்று நீர் மட்டத்திற்குக் கீழாகவும் ஏன் இருக்தல் வேண்டும்? பாத்திரத்திலுள்ள காலின் வாய்ப்புறம் நீர்க்குள்ளிருப்பதற்குக் காரணம் வெளிப்படை. அஃது அந்நீர்க்கு மேலதாயின் நீர் எவ்வாறு குழாயினுட் செல்லும்? இடையிலுள்ள வாயு நீரின் ஒவ்வொரு பாகத்தையும் அழுத்து மாதலிற் செல்லமாட்டாது.

பாத்திரத்து வெளியிலுள்ள காலின் வாய்ப்புறம் நீர் மட்டத்திற்குக் கீழாக இருக்கவேண்டுவதேன் என்பதைப்பற்றி ஆராய்வோம். முதலில், நீர் நிறைத்தலாலாவது உறிஞ்சலாலாவது குழாயிலுள்ள வாயு நீங்கி அது நீர் நிறைந்திருக்கிறதென்று வைத்துக் கொள்வோம். இரண்டாவது குழாயின் மேற்புறம் அல்லது உச்சி பாத்திரத்து நீர் மட்டத்திற்கு நேராக இரண்டடி உயரத்திலும் வெளியிலுள்ள காலின் வாய்ப் புறத்திற்கு நேராக மூன்றடி உயரத்திலும் இருக்கிறதென்று வைத்துக்கொள்வோம். ஏறக்குறைய முப்பது அடி உயரத்து நீரின் அழுத்தல் வலி வாயுவிற்கு உண்டென்று முன்னமே குறிக்கப் பட்டிருக்கிற தன்றோ? இவ்வழுத்தல் வலியோடும் குழாயின் இரண்டு வாய்ப்புறங்களின் புறம்பிலிருந்தும் ஆங்காங்குள்ள நீரை வாயு அழுத்திக் கொண்டிருக்கிறது. ஆனாற் குழாயினுள் வாயு சிறிதும் இல்லாததால் பாத்திரத்திலுள்ள காலின் வாய்ப்புறத்தின் அகத்தில் இரண்டடி உயரத்து நீரின் அழுத்தல் வலி மாத்திரமே இருக்கிறது. ஆதலின் அவ்வாய்ப்புறத்தின் புறம்பினின்றும் வாயு 28 அடி உயரத்து நீரின் அழுத்தல் வலியோடும் பாத்திரத்து நீரைக் குழாயினுட் செலுத்துகின்றது. அது போலவே, வெளியிலுள்ள காலின் வாய்ப்புறத்தின் அகத்தில் மூன்றடி உயர்த்து நீரின் அழுத்தல் வலி மாத்திரமே இருக்கிறது. ஆதலின் அவ் வாய்ப்புறத்தின் புறம்பினின்றும் அங்குள்ள நீரை வாயு 27 அடி உயரத்து நீரின் அழுத்தல் வலியோடும் குழாயினுட் செலுத்துகின்றது. இரண்டு வாய்ப்புற மூலமாகவும் நீர் குழாய்க்குள் அழுத்தப்பட்ட போதிலும் பாத்திரத்துள்ள நீர் அங்குள்ள காலின் வாய்ப்புற மூலமாக ஓரடி உயரத்து நீரின் **அதிகமான** அழுத்தல் வலியோடு உட்செலுத்தப்படுவதனால், நீர் பாத்திரத்திலிருந்து வெளியிலுள்ள காலின் வாய்ப்புறத்தின் வழியாகவே செலுத்தலைப்படுகின்றது. மேற் சொல்லியவாறன்றிக், குழாயின் உச்சி பாத்திரத்து நீர் மட்டத்திற்கு நேராக இரண்டடி உயரத்திலும் வெளியிலுள்ள

காலின் வாய்ப்புறத்திற்கு நேராக ஒரு அடி உயரத்திலும் இருக்குமாஞல், மேற் குறித்த காரணங்களால் வெளியிலுள்ள காலின் வாய்ப்புற மூலமாக அங்குள்ள நீர் ஓரடி உயரத்து நீரின் அதிகமான அழுத்தல் வலியோடு குழாயினுட்செலுத்தப்படுகின்றது. ஆதலிற் குழாயிலுள்ள நீரெல்லாம் படிப் படியாகப் பாத்திரத்தில் வந்து விழுந்துவிடும். இதனுல், வெளியிலுள்ள காலின் வாய்ப்புறம் பாத்திரத்து நீர் மட்டத்திற்கு மேலிருப்பின், அதன் வாயிலாக நீர் வீழ்ச்சியுண்டாகா தென்பது இப்பொழுது விளங்கும்.

குழாயின் உச்சி, பாத்திரத்து நீர் மட்டத்திற்கு நேராக முப்பதடிக்கு மேற்பட்டிருப்பின், பாத்திரத்துள்ள காலின் வாய்ப்புறத்தின் புறம்பினின்று நீரை அழுத்தும் வாயுவின் அழுத்தல் வலியினும் அகத்தினின்றும் அழுத்தும் நீரின் அழுத்தல்வலி அதிகமாகும் என்பது மேற் சொல்லிய காரணங்களால் நன்கு விளங்கும். ஆகவே, அந்நீர் பாத்திரத்தில் வந்து விழுமே யன்றி முற்குறித்த இடைவிடா நீர் வீழ்ச்சிக்கு இடங்கொடாததாகும். ஆதலின் மேலே சொன்ன இரண்டு நிபந்தனைகளுடன் மூன்றவது, குழாயி னுள்ள நீரின் உயரம் பாத்திரத்து நீர் மட்டத்திற்கு நேராக முப்பது அடிக்கு மிக்கிருத்தல் கூடாது என்பதும் மனத்திற் கொள்ள வேண்டும்.

கடைசியாக, இந்நீர்க்கோட் கருவியாலுண்டாகும் பயன் என்னெனில் அதனுல் மேட்டிலுள்ள நீர் நிலைகளினின்றும் அவற்றின் கரைகளை இடிக்காமலே பள்ளத்திற்கு நீர் எளிதில் கொணர்தல் கூடுமென்பதேயாம்.

சி. சுப்பிரமணியாசாரியார்.

---

## மூவகை யொருநெறி.

இவ்வுலகத்திலே, இடம் குலம் செல்வம் முதலியவற்ருல் பலபேதப் பட்ட குடும்பங்களிலே பிறந்து பல பேதப்பட்ட தொழில்களிலே மனம் பற்றி நடக்கும் மாந்தர்க்கெல்லாம் பொதுவியல்பு ஒன்றுண்டு. அவரவர் சிறப்பியல்புகள் எத்துணை வேறுபாடுடையனவாயினும் இச்சிறப்பியல்புக ளுக்கு ஆதாரமாய் பொது வியல்பு வேறுபாடுறுவதில்லை. அப்பொதுவிய ல்புதான் யாதெனின், ஒவ்வொருவரும் செய்யுங் கருமத்தை நிச்சயிக்கின்ற உள்ளக்கோள். அது மாருது எங்கணும் ஒருபடித்தாய் இன்பப்பேற்றையே நோக்கமாகக்கொண்டு விளங்குகின்றது. இன்பந்தானும் புலனின்பம், கரணவின்பம், ஆத்மவின்பமென பலவகையாயிருக்கும். புலனின்பம் கரணவி ன்பமென்பன பக்குவமெய்தார் விழையும் போலியின்பங்களாம். அவற்றை நுகர்வார் பெறுமின்பமும் காலத்தாலும் அளவானும் அறுக்கப்பட்டதாம். ஆத்மவின்பம் அவைபோலன்றி நிரதிசயானந்த மெனப்படும் மெய்யின்ப

மாம். அவற்றிலுழன்று எய்த்து வெறுப்புற்றாரே யிதற்குரியவர். புலனின்பம் கரணவின்பமென்பன பெயர்மாத்திரையான் இன்பங்களாவனவேயன்றி உண்மையில் அவை துன்பந்தருந்தன்மையனவாம். மற்றுப்பெரியோர் இன்ப நெறியென்றேற்படுத்தியதும் ஆத்மவின்பம் பெறுதற்கேயன்றி இப்போலி யின்பங்களைப் பெறுதற்கன்று. இஃதிங்ஙனமாயினும், மூவகை யின்பமும் இன்பமெனும் பெயர்க்குரியனவாய் மாந்தரை யவரவர் பக்குவ வேறுபாட்டிற்குத் தகவகுத்து நுகர்வித்துமே நடத்துகின்றன. ஆதலாற்றான் இன்பப் பேற்றின் நாட்டம் மாந்தர்க்குப் பொது வியல்பென்றல் பொருந்துமாறு.

இனி, எய்துதற்கரிய ஆத்ம வின்பத்தை எய்திய பெரியோர் அவ்வின்பம் வருநிலையை வீடென்றும் அப்பொருளையே குறிக்கும் வடமொழிகளால் முத்தியென்றும் மோக்ஷமென்றும் சுட்டியிருக்கின்றனர். அன்றியும் மற்ற வின்பங்களுக்கு அவாவை முன்கொண்டு செல்லவேண்டும். இதற்கு அது படாது ; அவாவை யறக்களைந்த பின்னரே பேரின்பம் பிறக்கும் என்று குறிக்கின்றனர்.

"வேண்டாமை யன்ன விழுச்செல்வ மீண்டில்லை
யாண்டு மஃதொப்ப தில்."
"ஆரா வியற்கை யவாநீப்பி னந்நிலையே
பேரா வியற்கை தரும்." என்றார் திருவள்ளுவதேவர்.

தேசந்தோறும் வகைவகையாய்ப்பெரியோர் நிறுத்திய சமயங்களும் இந்நிலையினையே குறிப்பா லுணர்த்துகின்றன. உண்மையையுள்ளபடி யுணர்ந்தோர் இவ்வாறே யெண்ணுகின்றனர். நிலை வீடாயினும் நெறி அவாவறுத்தலாயினும் கேட்ட மாத்திரையில் அவாக்களை யொருங்கே யறுத்தல் மக்களுள் அதிபுத்திமான்களுக்கும் இயலுவதன்று. நெறியென்றுரைக்கு மாற்றானே, சிறிது காலமேனும் அதன்கட் பயிலவேண்டு மென்பது புலப்படுகின்றது. நெறியாய் நிற்கும் அவாவறுத்தல் பயனுப் நிற்றலின் வேறு நெறிகளையுந் தனக்கங்கமாகக் கொண்டு நடக்கும். அவைதாம், பக்தி, கருமம், ஞானம் எனமுத்திறப்படும். அம்மூன்றற்கும் இறுதியில் மார்க்கம் யோகம் என்பன போன்ற பதங்கள் சேர்த்தும் வழங்கப்படும்.

பக்தியாவது அன்பு. பேரின்பத்திற்குக் காரணமாயிருக்கும் அன்பு கடவுளிடத்துச் செலுத்தப்படும் அன்பேயாகும். உலகத்துள்ள பொருள்களிடத்துத் தனித்தனி செல்லு மன்பு விரிந்து உயிர்கள்தோறும் கோயில் கொண்டிருக்கும் இறைவனிடத்து நிலைத்தொடுங்குங் காலத்து அது மெய்ப்பத்தியின் பயனென்ப. வைதிக சைவ மார்க்கங்களில் போதிக்கப்படும் நெறியும் அவற்றினை யடுத்துத்தோன்றிய பெரியோர்கள் பெரும்பான்மை கொண்ட நெறியும் இதுவே. இந்நெறிக்காதாரமாக வடமொழியில் நாரத முனிவரால் அருளிச்செய்யப்பட்ட பக்தி சூத்திரமொன்றும் சாண்டில்லிய

முனிவரால் அருளிச்செய்யப்பட்ட பக்தி சூத்திரமொன்றும் நிலவுகின்றன. தமிழ் மொழியில் தேவாரம் திருவாசகம் திருமந்திரம் தாயுமானவர் பா டல் முதலியன பக்தி நெறியின் அநுபவப்பயனைத் தெளிவாகக்கூறும் அருள் வாக்கியங்களாம்.

கருமம் என்பது செயல். கரும நெறியென்று கூறப்படுவது உண்மை யுணர்ந்த ஞானிகள் கருமங்களைப்புரியுங் காலத்து யாதொரு பயனுங் கரு தாது புரியும் முறைமை. இந்நெறி பகவற்கீதையில் விரிவாகக் கூறப்பட் டிருக்கின்றது. இனிக்கருமநெறி யென்னுஞ் சப்த மாத்திரையால் கடவுள ருளை நாடிச்செய்யப்படும் தவமாதி செயல்களுங் குறிக்கப்படும். அவை நிட் காமியதவமாம். உபாசனையாதி வழிபாடுகளும் இதனுட்டானடங்கும். பக்தி யென்பது, உள்ள நிகழ்ச்சியையே குறித்து நிற்றலின்.

ஞானம் என்பது அறிவு. ஞானநெறியாவது உள்ளதனை யுள்ளபடி யறிந்தடங்குதலைக் குறிக்கும். ஞானசாத்திரங்களுளெல்லாம் இந்நெறி தெளிவாகக் கூறப்பட்டுக் கிடக்கும். "எப்பொரு ளெத்தன்மைத்தாயினு மப்பொருள், மெய்ப்பொருள் காண்பதறிவு" என்றோதியபடி பொருள்க ளின் தோற்றத்தைக்கண்டு மயக்கங்கொள்ளாது, அவைதோறும் நிற்கும் உண்மையை நேரே காண்டலே ஞானமாவது. அக்காண்டலிற் பயிறலையே சமாதியென்பர்.

இவ்வாறு தோற்றமாத்திரையால் மூவகைப்படும் நெறிகள் உண்மை யில் ஒன்றே. அவை யுய்க்கும் முடிவும் ஒன்றே. பேரின்பப் பேருக்கே கருதப்படும் முடிவு. பக்தி, உளத்தை யிறைவனிடத் தொடுக்கி அவனைவிட் டொன்றையும் பற்றாதே செய்து இன்பத்துளிருத்துகின்றது. கருமம், நிட் காமிய தவத்தா னிறைவனை யடைவித்துப் பொருள்களிற் பற்றின்மையைத் தந்து நித்திய திருப்தியாகிய நன்னிலையைக் காட்டுகின்றது. ஞானம், மெய் யுணர்தலிலேயே மனத்தைப்பழக்கி உலகமயக்கமறுவித்து துறவுநல்கி யவாவை முற்றுங்களையு முகத்தானே பேரின்ப நிலையிற் பிரியாதிருக்கச் செய்கின்றது.

எஸ். அநவரத விநாயகம்பிள்ளை.



# திருவிளையாடற் கருப்பொருள் வெண்பா.

(432-ஆம் பக்கத் தொடர்ச்சி.)

## சோழனை மடுவில் வீட்டிய படலம்.

37. தென்மதுரைக் கோமாற்குஞ் சென்னிக்கும் போர்விளைய
முன்னவனும் வேடனாய் முன்னுற்றுப்—பின்மறையக்
காய்ந்துவர வீழ்ந்தெழுந்தான் கௌரியன் செம்பியனே
வீந்தான் மடுவினிலே வீழ்ந்து. (௫௦)

## உலவாக்கோட்டை யருளிய படலம்.

38. கூடலுறை வேளாண் குடிப்பிறந்தா னன்பர்தமை
நாடியமு திட்டுவர நல்குரவால்—வாடியபோ
தாதியுல வாக்கோட்டை யாங்கிய வூணளித்துச்
சோதியுல குற்றான் றுதித்து. (௫௧)

## மாமனாக வந்து வழக்குரைத்த படலம்.

39. செல்வத் தனபதியுஞ் செல்வ மருமகற்குச்
செல்வங் கொடுத்தரணி செல்லவே—வல்வழக்கிற்
றாயத்தார் கொண்டதைத்தாய் சாற்றவளித் தானால்
வாயத்தான் வாணிகனாய் வந்து. (௫௨)

## வரகுணனுக்குச் சிவலோகங்காட்டிய படலம்.

40. வேதியன் வீய விடைமருதூர் சென்றத்தி
நீதி வரகுணனு நீங்கினனா—யாதி
சிவலோகங் கண்டு திருவருளைப் பெற்றா
னவமோச்சித் தென்மதுரை யாண்டு. (௫௩)

## விறகுவிற்ற படலம்.

41. பத்திரனைக் காப்பான் பரிந்துவிற காளாகிச்
சத்துருவைச் சாதாரி தானிசைத்து—நத்தமதி
லோட்டினா னன்பருள மோங்கிய சிற்சபையி
னாட்டினான் கூட லரன்.   (௫௪)

## திருமுகங்கொடுத்த படலம்.

42. சீரார் மதிமலியென் செய்யதிருப் பாசுரத்தா
னாரும் பாணனுக்கு நாறுபனந்—தாரா
னிதியமிக வீந்துமிடி நீக்கினான் கூடற்
பதியமரு மேழைப் பரன். (௫௫)

## பலகையிட்ட படலம்.

43. செய்யதிருப் பாணன் திருச்செவியிற் கானவிசை
பெய்யவரன் கன்மாரி பெய்வித்தும்—மெய்யன்பன்
பாடினு னன்றும் பரிந்தளித்தான் கூடலம
ரீடிலான் பொற்பலகை யீந்து. (ருசு)

## இசைவாது வென்ற படலம்.

44. பாட்டிசையால் வெல்வதற்குப் பாணன்மனை தானீழ
நாட்டில்வரு பாடினியை நச்சுடைய—சூட்டரவம்
பூண்டான் பரிந்தளித்தான் பொன்மதுரைச் சுந்தரனு
யாண்டா னசரீரி யாய். (ருஎ)

## பன்றிக்குட்டிக்கு முலைகொடுத்த படலம்.

45. மன்ராஜ ராஜனுமே மாமதுரை யானுகையிற்
பன்னுதவன் சாபத்தாற் பன்றியாய்ப்—பன்னிருவர்
பாலீதாய் மாயத்தாய்ப் பன்றியுருக் கொண்டுசிவன்
பாலீந்து காத்தான் பரிந்து. (ருஅ)

## பன்றிக்குட்டிகளை மந்திரிகளாக்கிய படலம்.

46. பன்றி முகம்படைத்த பன்னிருவே ளாளரையு
மன்று வழுதி யமைச்சாக்கிப்—பின்றைத்
தன துபத மீந்தளித்தான் றண்மதுரை வீறு
மெனதுனதென் றில்லா விறை. (ருகூ)

## கரிக்குருவிக்கு உபதேசஞ்செய்த படலம்.

47. மங்காச் சிவவேட மாதவனின் சொற்கேட்டுக்
கங்காளற் போற்றக் கரிக்குருவி—யங்கால
வாயடைந்து தாழ வலியனெனும் பேரீந்தான்
பேயடைந்த காட்டுப் பிரான். (சுo)

## நாரைக்கு முத்திகொடுத்த படலம்.

48. வென்றிச் சுகுணன் வியன்மதுரை மீச்சிறப்பை
யன்று தவமுனிவ ரங்கறைய—நன்றிதெனக்
கேட்டுநாரை சென்றேத்தக் கேட்டவரந் தானளித்தான்
மாட்டுநாரை யுள்ளான் மகிழ்ந்து. (சுக)

## திருவாலவாயான படலம்.

49. போங்கும் பெருங்கீர்த்திப் பூடணனுள் சிந்துலகைப்
பொங்கி யழிக்கப் புதுப்பித்தான்—வங்கிய
சேகரற்குச் சித்தனுய்த் தென்மதுரை யெல்லையைக்கைந்
நாகத்தாற் காட்டினு னன்கு. (சுஉ)

### சுந்தரப் பேரம்பெய்த படலம்.

50. சென்னி யமர்க்கெழுந்த செய்தியினைத் தென்னவன்கேட்
டுன்னி யுடனடுங்கி யுள்ளழுங்கத்—தென்மதுரைச்
சுந்தரனும் வேடுவனாய்த் தோற்பித்தான் மால்படையைச்
சுந்தரப்பே ரம்பு தொடுத்து. (௬௩)

### சங்கப்பலகைதந்த படலம்.

51. நாமகளு மாறெட்டு நற்புலவ ராய்மதுரைக்
காமனடு கண்ணுதலைக் கண்டேத்தி—வாமமுடை
நற்பலகை பெற்றதன்மே னக்கனுட னேழேழாஞ்
சொற்புலவ ராயிருந்தார் சூழ்ந்து. (௬௪)

### தருமிக்குப் பொற்கிழி யளித்த படலம்.

52. கோங்குதேர் வாழ்க்கையெனக் கூறுதிருப் பாசுரத்தா
லங்கு தருமிக் கருள்புரிவான்—சங்கப்
புலவரிடஞ் சென்றெதிர்த்தான் போதமிலாக் கீரன்
சலமதனில் வீழ்ந்தான் றகித்து. (௬௫)

### கீரனைக் கரையேற்றிய படலம்.

53. வீழ்ந்தது கண் டேனை வியன்புலவர் துன்புற்றுத்
தாழ்ந்த மனத்தினராய்த் தாந்துதிக்கச்—சூழ்ந்தசடைச்
சம்பிரங்கிக் கீரனையுந் தான்கரையி லேற்றுவித்தான்
வம்பமருங் கூந்தலொடு வந்து. (௬௬)

### கீரனுக்கிலக்கண முபதேசித்த படலம்.

54. ஏற்றி யவன்பா வினிதிற் செவிமடுத்துத்
தேற்று வகையெண்ணித் தென்பொதிகை—வீற்றருளு
மம்முனியாற் கீரற் கருந்தமிழைப் போதித்தா
னெம்முனிவிற் கூட லிறை. (௬௭)

### சங்கத்தார் கலகந்தீர்த்த படலம்.

55. சிங்கப் புலவர்களுஞ் சண்பகம னுள்கையினிற்
றங்கடங்கள் செய்யுளையே தாந்துதிக்கச்—சங்கரனோர்
மூகையினன் மூவர் முதிர்புலமை காண்பித்தா
னோகையினு லுய்யவவ ரோர்ந்து. ௬௮

### இடைக்காடன் பிணக்குத்தீர்த்த படலம்.

56. இடைக்காடன் பாவை யிகழ்ந்ததனாற் சொக்கன்
வடவால வாய்ச்சேர வந்தித்—துடனடுங்கித்
தாழ்ந்தா ரருள்பெற்றான் சங்கப் புலவரடி
வீழ்ந்தான் குலேசனெனும் வேந்து. (௬௯)

### வலைவீசின படலம்.

57. கந்தன் குணியாயுங் கௌரிவலை மாதாயு
நந்திசுறா மீனாயு நண்ணவே—வந்தருளி
மீன்பிடித்து வேட்டுமையை மீண்டான் மதுரைநகர்
தேன்பிடித்த கொன்றைச் சிவன். (௭0)

### வாதவூரடிகளுக் குபதேசித்த படலம்.

58. தேசு மிகக்கொண்டு திருவாத வூரடிக
டேசிபெறு வான்றுறையிற் றுன்னியுப—தேசமுற
வன்பர்க் களித்தா வணிசேரு மாவென்றா
ரின்புற்றான் கூட லிறை. (௭௧)

### நரிபரியாக்கிய படலம்.

59. வருமென்ற நாட்கழிய வைகைத் துறைவன்
திருவாத வூரர்தமைச் சீறி—வருத்த
நரியைப் பரியாக்கி நல்கினனாற் சொக்க
னரிமர்த்த னேகையுற வன்று. (௭௨)

### பரிநரியாக்கிய படலம்.

60. நல்கும் பரிக ணரியாகிக் கானிரவிற்
புல்க வெகுண்டு புரவலனு—மொல்கிமன
முச்சி வெயினிறுத்த வூழிநீர் போற்கங்கை
யச்சமுறச் சென்றதவ னார்த்து. (௭௩)

### மண்சுமந்த படலம்.

61. ஆற்றுவரும் வெள்ள மணையிடுவா னூரார்க்குச்
சாற்றவுசி தன்வந்தி தான்சோரத்—தோற்றியரன்
பிட்டுக்கு மண்சுமந்தான் பின்படியும் பட்டான்மண்
கொட்டிமறைந் தானடைத்தான் கூறு. (௭௪)

### பாண்டியன் சுரந்தீர்த்த படலம்.

62. சீரார் குலச்சிறையார் செய்ய திருமுகத்தைப்
பாரா மதுரை பரிந்தடைந்து—தேரார்தீ
மன்னேற்றி வெப்புடன்கூன் மாநீற்றா னீக்கினனாற்
றன்னேரில் காழியிறை தான். (௭௫)

### சமணரைக் கழுவேற்றிய படலம்.

63. சங்கரியாள் பாலுண்ட சம்பந்தன் றீரா
லங்கு சமணரைவென் றானவரை—வெங்கழுவி
லேற்றினா னீற்றொளியை யெங்கும் பரப்பினான்
போற்றவே கூடலுளார் போந்து. (௭௬)

### வன்னியுங் கிணறு மிலிங்கமும் அழைத்த படலம்.

64. நின்வதுவை பொய்யென்று நிந்தித்த மூத்தாண்முன்
வன்னிகுழி லிங்கம் வரவிட்டுத்—தன்வதுவை
மெய்யென்று காட்டினளான் மீமதுரை யுற்றமரு
மையன் றனதருளா லங்கு. (எஎ)

### அருச்சனைப் படலம்.

65. இப்படித் தேவாட லெட்டெட்டு முத்தமிழோன்
செப்ப முனிவர்களுஞ் சிந்தைதெளிந்—தப்பன்
பதியெல்லாஞ் சென்று பரசிவத்தைப் போற்றிக்
கதிபெற் றிருந்தார் களித்து. (எஅ)

**திருவிளையாடற் கருப்பொருள் வெண்பா**

*முற்றிற்று.*

ஏ. சங்கரலிங்கம்பிள்ளை.

---

## ஜெயகாந்தன்.

**அங்கம் I : களம் 2.**

(399 - ஆம் பக்கத் தொடர்ச்சி.)

**தனஞ்சயன்.**—ஐயா, பவரோக பண்டிதரே! தாங்கள் செய்ததுமெத்தத் தகுதியான மருந்து.

**பவரோக பண்டிதர்.**—ஆம். மிகத் தகுதியான மருந்து.

**தன.**—அப்புறம்.

**பவ.**—அதை அதிக பிரயாசை யெடுத்துச் செய்து முடித்தேன்.

**தன.**—மெத்தப் பிரயாசை யெடுத்துக்கொண்டீரோ?

**பவ.**—ஆம். பிரயாசை யென்றாலும் பிரயாசையா? ஒரு கஜ புடமா? ஒரு குக்கிட புடமா? ஒரு மானிட புடமா?

**தன.**—மானிட புடங்கூடப் போட்டுவிட்டீரா?

**பவ.**—ஆஹா.

**தன.**—சரி, நீலமாட்டு வைத்தியர்தான். அப்புறம்.

**பவ.**—அந்த மருந்தைச் சாப்பிட்டால் அல்லவோ எனக்குண்டான வலி தீரும்.

தன.—ஆம் சாப்பிடத்தான் வேண்டும்.

பவ.—"மருந்தேயாயினும் விருந்தோடுண்"ணவேண்டும் அல்லவா ?

தன.—ஆம். ஆனல்—.

பவ.—என்னுடன் யார் சாப்பிடுகிறது ? யாரைக்கூப்பிட்டாலும் வரமாட்டேன் என்கிறார்களே.

தன.—அதற்கு என்னசெய்யவேண்டும் என்று சொல்லுகிறீர்.

பவ.—குடிகளாகிய நமக்கு ஓர் தளர்ச்சிவந்தகாலத்தில் யாரிடம் முறையிடவேண்டும் ?

தன.—யாரிடம் முறையிடவேண்டும்? நீர் தாம் சொல்லுமே.

பவ.—அரசனிடம் முறையிடவேண்டும் அல்லவா ?

தன.—ஆம்.

பவ.—அதைத்தான் கேட்கவந்தேன்.

தன.—ஆனல் மகாராஜாவை உம்மோடுகூட மருந்து சாப்பிடும்படி கூப்பிடுகிறீரோ ?

பவ.—ஆம், வேறு யாருந்தான் சாப்பிடமாட்டேன் என்கிறார்களே! எனக்கு நேர்ந்திருக்கும் வலி மற்றெப்படி நீங்கும்? விருந்தில்லாமல் யானே சாப்பிடலாமென்றாற் குருவாக்கிய பரிபாலனம் செய்வதினின்றும் தவறினவனுவேன்.

வீரகேசரி.—ஐயா பண்டிதரே ! உமக்கு ஜோசியம் தெரியுமோ ?

பவ.—ஓ ஓ.

வீரகே.—ஆனற் சொல்லும் பார்ப்போம்.

பவ.—எனக்குத் தெரியாதென்று நினைக்கிறீர்களோ? இதோ சொல்லுகிறேன் பாரும். "ஜோதிடம் பொய்யாது, மெய்யென்பதறிவரிய சூழ்கிரஹணஞ் சாட்சியாம்" இப்போதென்ன சொல்லுகிறீர்கள்?

தன.—பேஷ்! நீ ரம்பப் புத்திசாலி ஐயா நீர்.

(வீரபராக்கிரமன் ஓடிவருகிறான்.)

வீரபராக்கிரமன்.—(இரைப்புடன்) மகாராஜா ! மகாராஜா !!

வீரகே.—வீரபராக்கிரமா ! என்ன விசேஷம் ? சொல் சீக்கிரம்.

வீரப.—(இரைப்புடன்) மகாராஜா ! யான் இப்போது மூன்று மைல் தூரத்திலிருந்து ஓடிவருகிறேன். இந்த இரைப்பு நீங்கியவுடன் சொல்லுகிறேன்.

வீரகே.—இவ்வளவு அநாவசியமான சமாசாரங்கள்சொல்லியநீ இரண்டோர் வார்த்தையில் இன்ன முடிவென்று சொல்லப்பட்டாதா ? அப்பெண்ணைக் கொண்டுவந்து விட்டாயா ? என்ன ?

**வீரப.**—மகாராஜா! சற்றுப்பொறுங்கள். இரைப்பு நீங்கட்டும். சொல்லுகிறேன்.

**வீரகே.**—வீரபராக்கிரமா! என்ன இது! உனக்குப் புத்தியென்பது சற்றேனுமில்லையா? கொண்டுவந்தேன், இல்லை, என்று சொல்லுகிறதை விட்டுவேதேதோ குளறுகிறாயே. முட்டாள். சீ போ! என்முன்னில்லாதே.

**வீரப.**—யான் இவ்வளவுதூரம் சென்று வந்ததற்கு இதுதானா வெகுமதி? நன்றாயிருக்கிறது!

**பவ.**—வெகு நன்றாயிருக்கிறது. மிகவும் நன்றாயிருக்கிறது.

**வீரகே.**—ஏ! பயித்தியம். உஸ், வாயை மூடு, போதும்.

**பவ.**—மகாராஜா! என்னுடன் மருந்து சாப்பிடுகிறதற்கு என்ன சொல்லுகிறீர்கள்? சொல்லுங்கோள்.

**மூடமதி.**—பேசாதிரும் ஐயா!

**வீரகே.**—தனஞ்சயா! இப்போதாவது அவன் சமாசாரம் இன்னதென்று சொல்லுகிறானா பார்?

**வீரப.**—போதும் போதும். மகாராஜா! யான் இவ்வளவுதூரம் போய் வந்ததற்கு "சீபோ" "சீவா" என்கிற பட்டத்தைப் பெற்றேனே! யான் சமாசாரம் சொன்ன பிறகு கிடைக்கப்போகிற பட்டம் வேறாகத்தானிருக்கும். ஆக்கனை தீர்ந்த பிறகு எதுவும் அப்படி அப்படி தானே.

**வீரகே.**—வீரபராக்கிரமா! உனக்குப் புத்தியிருந்து பேசுகிறாயா? என்ன? எதற்காக உன்மேற் சினந்தேன் என்கிறதை அறிந்துகொண்டாயா நீ? கேள்விக்குச் சரியான பதிற் சொல்லாமல் என்னென்னவோ அநாவசியமானவைகளை எல்லாம் செப்பினையே யென்றல்லவோ யான் சினந்தது. கோபிக்கவேண்டாம் வா; போய்வந்த சமாசாரம் என்ன சொல்.

**பவ.**—மகாராஜா! என்ன சொல்லுகிறீர்? எடுக்கவா மருந்தை?

**வீரகே.**—யார் ஓய் நீ? பயித்தியக்காரனா யிருக்கிறாய்! தனஞ்சயா! இக்கிழவனை உடனே அப்புறப்படுத்து.

**தனஞ்.**—பெரியவரே போம் எழுந்து.

**பவ.**—இல்லை. இல்லை. இல்லை. (அனைவரும் சிரிக்கிறார்கள்.)

**வீரகே.**—இனி மேலாவது பேசாதிரும்.

**பவ.**—(தலையசைத்துக்கொண்டு) அப்படியே! அப்படியே!

**வீரகே.**—வீரப்ராக்கிரமா. உனக்கு இன்னம் மனம் வரவில்லையா?

**வீரப.**—அரசே! தாங்கள் நாடியபெண்மணியைக்கொண்டுவந்து விட்டேன்.

**வீரகே.**—சபாஷ்! வீரபராக்கிரமா ! என்னருகில்வா. நீயல்லவோ நண்பன். உன்னைப்போலும் எனக்கு வேறொரு நண்பன் கிடைக்கப்போகின்றனோ இவ்வுலகில் ?

**தனஞ்.**—ஒருநாளுமில்லை. மகாராஜா!

**வீரகே.**—நண்பனே ! அம்மாது சிரோமணி எங்கே இருக்கின்றாள் இப்போது?

**வீரபரா.**—ராஜ ! போகிகள் பின்னாற் பல்லக்கிற் கொண்டுவருகிறார்கள். முன்னாடி தங்களிடம் சமாசாரம் சொல்லுகிறதற்கு யான் ஓடி வந்தேன்.

**வீரகே.**—ஒருவரும் பிரவேசிக்கப்படாத மாளிகையில் வீற்றிருந்த அம்மாது சிரோமணியை எவ்வாறு கொணர்ந்தனை ?

**வீரபரா.**—மகாராஜா ஓர் தந்திரமான சூழ்ச்சியன்றோ செய்து கொணர்ந்தேன்.

**வீரகே.**—எத்தகைய சூழ்ச்சி செய்தனை ? வீரபராக்கிரமா ?

**வீரபரா.**—அதைப்பற்றித் தாங்கள் ஏன் கவனிக்கவேண்டும் ? தாங்கள் நாடியிருந்த பெண்ணோ கிடைத்துவிட்டாள். இனி அதைப்பற்றி பேசுவானேன் ?

**வீரகே.**—ஆயினும் யான் அதை அறியப்படாதா ?

**வீரபரா.**—ஆனாற் சொல்கின்றேன் கேளுங்கள். யானிவ்விடம் விட்ட அன்று இரவு சுமார் 12 மணிக்கு அம்மாது இருந்த மாளிகையைக் கொளுத்திவிட்டுப்பின்பக்கம் வாயிலில் ஓர் பல்லக்கை வைத்துக்கொண்டு சிவிகையாட்களோடு கவனத்துடன் காத்திருந்தேன். மாளிகை திப்பற்றி யிருந்ததாலும் அம்மாது நித்திரையிலிருந்து திடுக்கிட்டெழுந்ததனாலும் மனங்கலங்கிப் பின்பக்கவாயிலாய் ஓடிவந்த போது சிவிகையைக்காட்டி ஏறிக்கொள்ளும்படி சொன்னேன். அக்கினியிலிருந்து தப்பினாற் போதும் என்கிற எண்ணத்தை யுடையவளான அம்மாது பல்லக்கைப் பற்றியும், என்னைப்பற்றியும் யாதொன்றும் விசாரியாமலே பல்லக்குக்குள் ஏறிக்கொண்டனள். உடனே பல்லக்கைத் தூக்கிக்கொண்டு புறப்பட்டுவந்தோம்.

**வீரகே.**—ஆஹா! வீரபராக்கிரமா! உன்னுடைய சமர்த்தே சமர்த்து! உன்னுடைய பெயருக்குத் தகுந்த குணமும் உன்னிடம் அமைந்திருக்கின்றதே. உன்போலும் நுட்ப புத்தியுடையவர் வேறொருவர் இருப்பார்களா ?

தனஞ்.—ஏது ? இருக்கவே மாட்டார்கள்.

வீரகே.—நண்பனே ! நீ இப்போது எனக்குச்செய்த உபகாரத்திற்கு நான் என்ன கைம்மாறு உனக்குச் செய்யப்போகின்றேன் ?

வீரபரா.—மகாராஜா ! தங்களுடைய தயவிருந்தாற் போதாதா ? வேறு உபகாரமும் செய்யவேண்டுமா ?

வீரகே.—உன்னை மறந்துவிடுவேன் என்று நினைக்கிறாயா ? வீரபராக்கிரமா ! என் ஆயுள் உள்ளவளாயில் உன்னை மறவேன். இஃது உண்மை.

பவ.—மகாராஜா ! நாழி——.

வீரகே.—உஸ், பேசாதே.

பவ.—இல்லை. இல்லை.

வீரகேசரி.—வீரபராக்கிரமா! இவ்விடம் விட்ட அன்று இரவே அம்மாளிகையைக் கொளுத்திப் புறப்பட்டதாகச் சொல்லுகிறாயே! இந்த நாலைந்து தினங்களாக என்ன செய்தீர்கள்?

வீரபரா.—மகாராஜா ! யாராவது கண்டுபிடித்து விடப்போகிறார்களென்று சுற்றுவழியாகச் சிவிகையைக் கொணரும்படி கட்டளையிட்டு, எனது மாமியார் இருக்கும் ஊருக்குச் சென்று அவ்விடம் இருந்துவிட்டு இப்போது தான் வருகிறேன். இன்றைத்தினத்தில் இந்தக் காலத்தில் தான் பல்லக்கை இங்குக் கொண்டுவரும்படி சிவிகையாளருக்குக் கட்டளையிட்டு வந்தேன். அவர்களும் கொண்டுவருகிற சமயம்தான்.

வீரகே.—நல்லகாரியஞ் செய்தனை ! வீரபராக்கிரமா ! அப்பெண் சென்ற நாலுதினமாக உணவுக்கு என் செய்திருப்பாள்?

வீரப.—வேண்டிய உணவுகள் யாவும் பல்லக்கிலேயே தயார் செய்துவைத்திருக்கிறேன். அம்மாதுக்குப் பசிப்பிணி யென்பது சற்றும் அணுகவே அணுகாது.

வீரகே.—அசாத்தியமான காரிய மெல்லாம் செய்த உனக்கு இஃது ஓர் பெரிய காரியமா? அம்மாதுக்குத் தகுந்த உணவெல்லாம் வைத்தேயிருப்பாய்.

பவ.—மகாராஜா ! வலி அதிகமாகிறது. நாம் எப்போது சாப்பிடுகிறது விருந்தை?

வீரகே.—தனஞ்சயா ! இஃதென்ன பெரிய சங்கடமாயிருக்கிறது ! இம்மண்டபத்தினின்றும் அப்புறப்படுத்தி விடு.

**தனஞ்.**—ஐயா ! வாரும். (அருகிற்போய்ப் பிடித்திழுக்க பண்டிதர் விழுந்து விடுகிறார்.)

**வீரகே.**—தனஞ்சயா ! ஆட்களைக் கூப்பிட்டு இவனைத் தூக்கிக்கொண்டு போய்ப் பயித்தியக்காரர் இருக்கும் வயித்தியசாலையில் விட்டு வரும்படி சொல்.

(தனஞ்சயன் போகிறான்.)

**மூட.**—ஐயா பெரியவரே ! எழுந்திரும் (தட்டி யெழுப்புகிறார்.)

**பவ.**—உர். உர்.

**மூட.**—ஐயா ! எழுந்திரும் (மறுபடியும் எழுப்புகிறார்.)

**பவ.**—ராஜா மருந்தா கேட்கிறார். இதோ கொடுக்கிறேன் (எடுக்கிறார்.)

(தனஞ்சயன் இரண்டு ஆட்களுடன் வருகிறான்.)

**தனஞ்.**—அடா தூக்கிக்கொள்ளுங்கள். (தூக்குகிறார்கள்)

**பவ.**—யாரப்பா அது ? விடுங்கள். ராஜாவுக்கு மருந்து கொடுத்துவிட்டு வருகிறேன்.

(தூக்கிக்கொண்டு போய்விடுகிறார்கள்.)

**வீரகே.**—அப்பா சனி தொலைந்தது.

**வீரப.**—மகாராஜா! அவர் யார்?

**வீரகே.**—யாரோ ! எனக்கென்ன தெரியும்.

(இன்னும்வரும்)

தி. மே. முருகேச முதலியார்.

---

## புத்தகக்குறிப்புகள்

வித்யாரண்ய நகரம்.

[சென்னைச் சடகோபாசாரியண்ட் கம்பெனியாரால் வெளியிடப்பட்டது. விலை: அணா. 0—8—0. தபாற்கூலி வேறு.]

இச்சிறு ‘சரித்திர விநோதகதை’ **இன்பவல்லியின்** முதன்மலராக வெளிப்போந்துளது. இதனை யியற்றியோர் ம-ா-ா-ஸ்ரீ **து. ரா. ஸ்ரீநிவாஸ ஐயங்கார்**, பி. ஏ. இஃதாடவரும் பெண்டிரும், கற்றோரும் மற்றோரும் படித்துப் பயன்பெறத் தக்கவாறு எளிய நடையிலெழுதப்பட்டுளது; பத்து அத்தியாயங்களுடையது; இதன் முதலில் நூலாசிரியர் பதிப்பாசிரியராகிய பிரமஸ்ரீ வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியாரவர்கள் பி. ஏ.

க்கு வரைந்துள கடிசத்திற்கூறுமாறு, இதனைப் படிப்போருக்கு விஜயநகரம் என்ற பெரிய பட்டணமானது ஒரு சிறு கூட்டத்தாராலாக்கப்பட்ட விதம் தெரிகின்றது. இப்புத்தகத்தின்கட் பிழைகளதிகமாயில. இதனை வாசிப்போரெவரும் 'படுகொலை' யென்ற அதிகாரத்தின்கீழ்க் கூறப்படுவனவற்றிற் கிரங்குவாரென்பதொருதலை. அதான்றியும் இரண்டாமத்தியாயத்திற் காட்டப்படும் நூலாசிரியர்தம் நகைமொழிநிலையினைக் கண்டு யாவரே மெய்ச்சி அதனைச் சுவையாதிருப்பார்? இதன்கணிருக்கும் பாத்திரங்களுள் ஹரிஹரன், நரசிங்கன், வித்யாரண்யர் முதலியோர் தாம்பிடித்த காரியத்தை விடாது 'உறுதிபயப்ப கடைபோகாவேனு மிறுவரை காறு முயல்ப' வென்ற கூற்றினுக்குத்தக்க இலக்கியங்களாய் அதன் உண்மையை யெடுத்துக்காட்டி யொளிர்கின்றனர். மற்று, டோக்லாக்கின் இயல்பை நூலாசிரியர் தாமே யெடுத்துக் கூறியிருக்கின்றார். இப்புத்தகமானது அதனைப் பதிப்பித்தோர் புகழையும் வளர்க்கின்றது. இது சென்னை வெ. நா. ஜூபிலி யச்சுக்கூடத்தில் நல்ல காகிதத்திற் பதிப்பிக்கப்பட்டுளது. நூற்றிருபது பக்கங்களுடையது.

### தசரதன் தவறு.

[தி. அ. சுவாமிநாத ஐயர், எவ். டி. எஸ். வெளிப்படுத்தியது; விலை அணு 0—4—0. தபாற்கூலி வேறு.]

சென்னைக்கிறித்தவ கலாசாலைத் தலைமைத் தமிழ்ப்பண்டிதராகிய பிரமஸ்ரீ. வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியாரவர்கள் பி. ஏ. புனையும் **நாமகள் சிலம்பின்** ஐந்தாம் பரலாகிய இந்நூல், இனிய செந்தமிழ் நடையிற் கடலூர்க் கலாசாலைத் தலைமைத் தமிழ்ப்பண்டிதர் **ம-ள-ள-ஸ்ரீ, ந. பலராம ஐயரவர்**களால் இடையிடையே விழுமிய பொருள் பயக்குஞ் செய்யுட்களுடைத் தாய வசனரூபமாய் எழுதப்பட்டுளது. இது நாடக விகற்பங்களுள் ஒன்றும் **அங்கம்** அல்லது **சிறப்பங்கம்** என்பதன் பாற்படும். அயோத்திமாநகர மன்னனும் இராமபிரான் தந்தையுமான தசரத சக்கிரவர்த்தி தனது இளமைப்பருவத்து வேட்டையாடச் சென்று நிற்குங்கால் தான் நின்ற புதர்மருங்கி லிருந்த தடத்து ஓர் பார்ப்பனச்சிறுவன் தன் தந்தையின் நீர் வேட்கை தீர்ப்பான் எடுத்துக்கொண்டிருந்த நீரின் ஓசையைக்கேட்டு, யானை நீர் பருகு மொலியென மருண்டு வில்லெடுத்து அம்பொன்றைத் தொடுக்க, அஃதச்சிறுவன் மார்பிற் பாய்ந்தமையால் அவனழுகுரலைக்கேட்டு ஓடித் தான் செய்ததன் பயனைக் கண்ணுற்று வருந்தி அச்சிறுவன் வேண்டுகோளின்படி, நீரை யெடுத்து அவன்றந்தையிடஞ் சென்று கொடுத்து அவர் புத்திரன் தன் தவற்றாலிறந்தமையைக்கூற, புதல்வன் இறந்தமையால் வெகுளி மேலிட்டும், கருணை கூர்ந்து மன்னனும் மகன் பிரிவாற்றாமையா

விறத்தல் வேண்டுமெனச் சபித்தனரென ஐதிகமாய் நம்மவர்களுள் வழங்கி வரும் வரலாற்றினின்றும் புனையப்பட்டுளது. அவலச்சுவை யுடைத்தாய இச்சிறு நாடகத்தின் நான்காங் களத்தினைப்படிக்கு மெவரும் கன்னெஞ்ச ராயினும் இரங்குவராதலின், அஃது ஆசிரியரது கல்வித்திறத்தினை நன்கு விளக்குகின்றது. எத்திறத்தராயினும் விதிப்பயனை விலக்கலருமை யென்னும் ஆதிதெய்விகக்கொள்கையை வற்புறுத்திக்காட்டும் இச்சிறு நூல் தமிழ் அறிந்த வெல்லோரும் படிக்கத்தக்கது. பாத்திரங்களெல்லாம் நன்கமைந்திருக்கின்றன. மேன்மையான காகிதத்தில் நற்பெயர் பெற்ற தாம்ஸன் கம்பெனியாரால் வெகு நேர்த்தியாய் அச்சிடப்பட்டிருக்கின்றது. யாவரும் எளிதில் வாங்கிப்படிக்கத்தக்கவாறு குறைந்த விலை யேற்படுத்தப்பட்டிருக்கின்றது.

பாவலர் விருந்து : முதல்நாள்.

[எஸ். பி. சி. கே. அச்சியந்திரசாலையிற் பதிப்பிக்கப்பட்டது. மிகவுமுயர்ந்த கடிதத்தில் அச்சிடப்பட்டுளது. 102-பக்கங்களுள்ளது. விலை அணா. 0—8—0. தபாற்கூலி வேறு.]

இந்நூல் சென்னைக் கிறித்தவகலாசாலைத் தலைமைத் தமிழ்ப்பண்டிதர் பிரமஸ்ரீ, வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியாரவர்கள், பி. ஏ., இயற்றியது. தமிழ்மகண்மேகலையின் மூன்றுங் கிங்கிணியாய் மிளிர்ந்து தோன்றுமிந்நூல் யாவருங்கண்டு களிப்பான் வெளியுலவும் பருவத்தினை யடைந்தது. பதினொரு சிறுநூல்களை யுடையதாய் இருபானிரண்டு விருத்தபேதங்கள் பெற்ற 224-பாக்கள் கொண்டது. படிப்போர் யாவர்க்கும் இழுமெனு மோதை பயப்பதாய்ச் செவ்விய நடையிற் செம்பொருடந்து அற்புத நவீன கற்பனை செறிந்து தத்துவவுண்மையுந் தருக்கநூல் வண்மையு மொத்து விளக்கி யுயர்தரு நீதியை மயர்வறக்காட்டும் இந்நூலினால் ஆசிரியர்தந் திறனிற்றென்று ஒருவாறறியலாகும். நாவுக்கரையர்தம் நவிலரும் பத்தியும், கவிச்சக்கிரவர்த்தியாங் கம்பனார் சொற்றொடைச் செறிவும், கச்சியப்ப சிவாசாரியர்தம் மெய்ச்சிய நடையும் ஒருங்கே யமைந்துளவாம். ஒன்பான் சுவையும் அமைந்து பற்பல அணிநலம் பெற்றுத் திகழுறும் இந்நூலைக்கண்டோர் யாவருங் கண்டே யென்பார். இதனுளடங்கிய 'மணிய சிவனார் கலிவெண்பா' வினானும் 'அவயவவறிக்கை' யானும் ஆசிரியர் சுத்தாத்துவிதவுண்மையைக் கூறுமுகத்தானே தோன்றிய பத்தியும், 'கையறுநிலை' யினானே யவலச்சுவை தெரிக்குமாற்றலும், 'கடற்கரையுலா' வினால் தற்காப்புமுறை யென்னுஞ் சுபாவநியமத்தினை வலியுறுத்திய வன்மையும், 'தாமரைத்தடம்', 'பட்டினக்காட்சி' களாற் இயற்கை வனப்பையும் பழவினை முறைமையையும் ஊழின் வலிமையையுமினிது தெரித்தலும், 'கலங்கரை விளக்க' த்தானாசிரிய

ரது நடைத்துரையாற்றலும், 'ஆசானுருநிலை'யாலன்னான் மாட்டுத் தமக்குள அன்பும், 'மதுரை மாநகரினாற் சுதேசாபிமானமுஞ் சுபாஷாபிமானமும், 'போலியாராய்ச்சியன்' என்பதனானே நூல்களிற் குற்றமே காண்டலாராய்ச்சியன் றென்றும், 'ஓரையப்பாட்'டினால் உலக நிலையாமையைப்பற்றித் தாங்கொண்ட கருத்தும் புலனாகின்றன. பற்பல விடங்களினு முண்மைதோன்ற வாதித்து விடயங்களை யாவரு மெளிதிலறிவான் றெரிக்குமாற்ற லிவ்வாசிரியர்பால் இனிது விளங்குதலை யாவருமறிவாரென்பது திண்ணம். இதுகாறும் பன்னாளாய்ப் பழையவுண்டியினை யுண்டும் அமையாது வருந்துந் தமிழ்ப் பாவலர்க்கு விருந்தாய் அன்னார் இன்சுவைப் பொருளினையுண்டு தேக்கெறியும் வண்ணந்தோன்றிய விந்நூலைச் சென்னைச் சருவகலாசாலையார் கண்டு மகிழ்ந்து எவ். ஏ., பி. ஏ., முதலிய பரீக்ஷைகளுக்குப் பாடமாயேற்படுத்தி இன்னுமிவ்வாசிரியரைப் பன்னாளும் விருந்திடுமாறு ஊக்குவாரென்று நம்புகின்றோம்.

நன்றியறியாமகன்.

[சென்ட்ரல் புக் டிபோ கே. கிருஷ்ணசாமி ஐயர், பி. ஏ., வெளியிட்டது. விலை அணா 0—8—0. தபாற்கூலி வேறு.]

இந்நூல் சென்னைக் கிறிஸ்தவ கலாசாலைத் தலைமைத் தமிழ்ப்பண்டிதர் **பிரமஸ்ரீ வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியார், பி. ஏ.,** பதிப்பித்துவரும் **இன்பவல்லியின்கண்** ஐந்தாம் மலராகும். இதனை யியற்றினார் **ஸ்ரீ. து. ரா. ஸ்ரீநிவாச ஐயங்கார், பி. ஏ.** இதன் கதைப்போக்கு மிகவு மெளிதில் விளங்கக்கூடியதாயிருக்கின்றது. நடை மிகவுமெளிதென்றே சொல்லலாம். நோக்குமிடத்துப் பெண்பாலாரும் நன்கு அதன்கட் பயிலவேண்டுமென்ற கருத்துடன் எழுதப்பட்டிருக்கவேண்டுமென்பது புலப்படுகின்றது. இதன்னூலாசிரியர் கூடியமட்டும் எப்பொருளையும், யாம் நாடோறுங் காணுமாறுபோல, இயற்கையொழுங்கு வழுவாது பொலிவுபெற அமைக்கின்றனர். தற்கால மேற்புல முறைப்படி இந்நூல் பல்லாற்றானும் இயலாநிற்பச் சில பாத்திரங்களின் மேம்பாடு மிகவும் முகஞ்செய்து கிடக்கின்றன. **இலக்ஷ்மியினது** சீலம் மிகவும் மேன்மையுள்ள தாமாறு காண்க. அன்றியும், அவள் தன் பெயர் காரணவிடுகுறி யாமாறு தோற்றுகின்றனள். சுந்தரனது தகப்பனெனச் சாற்றப்படும் **இராமநாத ஐயரோ** மிக முன்கோபமுடையாராகின்றனர். இது பதறிச் சுந்தரனைக் கொல்வதற்குப் பதிலாகப் பிறனொருவரைக் குத்தியதும், மகனைக்கொன்ற பிறகு தான் குத்திக்கொண் டிறத்தலும், முதலியவற்றால் தெற்றென விளங்கும். ஆயினும் நூற் கூற்றையே சார்ந்து ஆராய்வோமாகில் இராமநாத ஐயரது சீலப் புனைவினை நாம் உய்த்துணர்வது அரிதாகின்றது. இது நிற்க. இந்நூலாசிரியர் இயன்றமட்டும் இக்கதை

யைச் செவ்விதாய்ப் பண்படுத்திருக்கின்றனர் என்பது யாவர்க்கும் புலனும். இது நல்ல கடிதத்தில் நன்கு பதிப்பிக்கப்பட்டுளது. இதன்கண் 35 - அத்தியாயமுள. இது 140 பக்கங்கொண்டது. செய்ந்நன்றியும், வாழ்க்கைப் பயனுமறியா ஒருவன் எய்தும் முடிவை வாசிப்போர்க்கு நன்கு புலப்படுத்தி, இஃது அவர்களை அறிவுறுத்துமென்பதொருதலை.

## மதுரை மாலை.

[பண்டிதமித்திர யந்திரசாலையிற் பதிப்பிக்கப்பட்டது. விலை : அண. 0—1—6. தபாற்கூலி வேறு.]

இஃது காலஞ்சென்ற மதுரையம்பதி மகாவித்துவான் ஸ்ரீ **சபாபதி முதலியாரவர்களால்** மதுரைமாநகர்ச் சொக்கலிங்கப் பெருமான்மீது இயற்றப்பட்டதோர் பாமாலை ; நூறு வெண்பாக்களாலாயது ; இவையிற்றுள் முதலைம்பது பாடல்களும் முன்னீரடிகளும் பின்னீரடிகளுந் தனித்தனி யமக மடக்குவாய்ந்தனவும் இறுதி யைம்பது பாடல்களும் முன்னீரடிகள் சிலேடையும் பின்னீரடிகள் யமக மடக்கும் வாய்ந்தனவுமாயுள்ளது ; யாண்டும் எட்டுணையேனு மிடர்ப்பாடின்றி யாக்கப்பட்டுளது ; ஆங்காங்குச் சொன்னயங்களும் பொருணயங்களும் பொலிந்து விளங்கப் பெற்றது; கற்பனைத்திறன் பெரிதும் வாய்ந்தது ; நூல் முழுவதும் ஆழ்ந்த கருத்துக்களடங்கியது; பண்டிதர்கள் யாவரும் அகமகிழ்ந்து படித்துக் களிகூரத்தக்கது ; பளபளப்புள்ள உயர்ந்த கடிதத்தில் அச்சிடப்பட்டுள்ளது ; யாவருமெளிதிற் பெற்றுப்படிக்குமாறு மிகவுங் குறைந்த விலையிடப்பட்டுள்ளது ; இந்நூலாசிரியரது மாணுக்கருள் ஒருவராகிய பிரமஸ்ரீ வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியாரவர்கள், பி. ஏ., பதிப்பித்தது.

## திருக்கழுக்குன்றக் கலம்பகம்.

[இராயல் விக்டோரிய யந்திரசாலையிற் பதிப்பிக்கப்பட்டது. விலை அண 0—2—0. தபாற்கூலி வேறு.]

இந்நூல் திருவிடை மருதூர்க் கலம்பகத்தின் ஆசிரியராகிய **திருவெவ்வுளூர்-இராமசாமிச் செட்டியாரவர்கள்** இயற்றியது; பலவகைப்பட்ட யாப்பு விகற்பங்களுள்ளது; சொற்பொருணயங்கள் வாய்ந்தது; பண்டிதர் யாவரும் பரிந்து பாராட்டத் தக்கது ; கழுக்குன்ற மான்மிய மனைத்தையுஞ் சுருக்கித் தெரிப்பது ; பத்திச்சுவை மிக்கொழுகுவது ; சைவராயினர் யாவர்க்கும் இன்றியமையாதது ; மிகவும் பளபளப்புள்ள நல்ல கடிதத்திற் பதிப்பிக்கப் பட்டுளது.

## தாமரை நாண்மலர்.

[இது தி. அ. சுவாமிநாத ஐயர், எவ். டி. எஸ்., பதிப்பித்தது. விலை : அண. 0—6—0. தபாற்கூலி வேறு.

இந்நூல் கடலூர்க் கலாசாலைத் தலைமைத் தமிழ்ப்பண்டிதராகிய ஸ்ரீ ந. பலராமையரவர்கள் இயற்றியது; பிரமஸ்ரீ, வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியார், பி. ஏ. புனைந்தவரும் தமிழ் மகண் மேகலையுள் நான்காங் கிங்கிணியாம். இதன் கண் ஆறு செய்யுணூல்களுள்ளன; நூலின் பெயருக் கேற்ப, முதற்கண் 'தாமரை' என்றதன்கட் சுந்தரயூகத்தாலமைந்த அரிய கற்பனைகள் செறிந்துள; 'குயில்' என்றதனால் தாம் இயற்கைப் பொருள் களைக் கண்டு தாம் ஆனந்திக்குமாறும், 'காணமற் போனதோர் ஒட்டை' யென்பதனால் உற்று நோக்குதலாற் போதரும் பயன் இனைத்தெனத் தெருட்டுமாறும், 'ஆசிரிய பஞ்சகம்' என்னு நூலினால் தமக்குத்தமது ஆசிரியர் மீதுள ஆராவன்பும், 'அரசிபிரிவாற்றுமை' யென்பதனால் தமக் குள அரசவிசுவாசமும், 'சீமந்தனி சரிதை'யால் பன்பழைமயின் ஆசாரச் சீர்திருத்தத்திற்கு ஆவனசில காட்டுமாறும் புலப்படுகின்றன. இவரது பாடல்களெல்லாம் செவிக்கின்பம் பயப்பனவாய்ச் செந்தமிழ் நறுமணங் கமழ்ந்து விளங்குகின்றன; இந்நூல் 82 பக்கங்களுள்ளது; நல்ல உயர்ந்த கடிதத்தில் அச்சிடப்பட்டுளது. இஃது எப். ஏ. முதலிய பரீக்ஷைகட்குப் பாடமா யேற்படுத்தத்தக்கது.

## நேர்நேர் பழமொழித்திரட்டு.

இதுசென்னைப் பச்சையப்பன் கலாசாலைத் தலைமைத் தமிழ்ப்பண்டிதர் ம-௱-௱-ஸ்ரீ, திருமணம். செல்வகேசவராய முதலியாரவர்கள், எம். ஏ. தொகுத்ததோர் அருமையான நூல்; இதன் கண் இரண்டு பாகங்களுள; முதற்பாகம் தமிழ்ப் பழமொழிகட்கு நேர் நேரான ஆங்கிலப் பழமொழி களை அகராதித் தொடைபெறக் காட்டுவது; இரண்டாம்பாகம் ஆங்கிலப் பழமொழிகட்கு நேர்நேரான தமிழ்ப் பழமொழிகளை அகராதித்தொடை பெறக்காட்டுவது. இவ்விரண்டு பகுதிகளின் பயனும் அவற்றின்கட் பயின் றறிந்தவர்க்கே தெற்றென விளங்கும்; இது மிகவும் சிரமப்பட்டுப் பல் லாண்டுகளாக இதற்கென வுழைத்து ஒரு வழிச்சேர்த்துத் தொகுக்கப் பெற்றதாமாறு யாவர்க்கும்புலனும். நெடுநேரம் யோசித்துங் கிட்டுதற் கரிய ஒத்த கருத்துடைய பழமொழிகள் பல நேர்மைபெறக் காட்டப் பட்டுள தன்மை மிகவும் வியக்கற்பாலதே; இதன்கட் சிற்சில பழமொழி கள் தென்னாடுகளில் வேறுபட வழங்குகின்றன; சில இழிசினர் வழக் குரைகளாம்; சில மரூஉ மொழி பொதுளியன; சில பழமொழிகளெனவே தோன்றுதவாறு அத்துணை நீண்டும், சட்டுரைச் சுவையற்றும், எதுகை [illegible]ை பிறழ்ந்துங் கிடக்கின்றன; இருந்தனவற்றை யிருந்தவாறே யச் [illegible]து முதலியாரவர்கட்கு இவையிழுக்காகா; இந்நூல் கலாசாலை [illegible]ரும் மாணக்கர்கட்குப் பெரிதும் பயன்படத்தக்கது; விலை: [illegible]. த்பாற்கூலி வேறு.

ஸ்ரீ விருத்திப்பிரப்பாகரம்.

இஃதோர் அருமையான வேதாந்த நூல். இதைச்செய்தவர் ஸ்ரீ நிசலதாசரவர்கள். இந்த நூல் ஹிந்தி பாஷையிலிருந்ததைப்பற்றித் தமிழ் நாட்டார்க்குப் பிரயோஜனமாம்படி தஞ்சைமாநகரம் ஸ்ரீமத்-துப்புஸாமி ராஜு அவர்களால் இது மொழிபெயர்க்கப்பட்டு, சென்னை ரிப்பன் அச்சியந்திரசாலைத் தலைவர் ம-௱-௱-ஸ்ரீ சை. சிவசங்கர செட்டியார் அவர்களால் அச்சிடப்பட்டிருக்கின்றது. இதன் விலை ரூபா. 4. இப்புத்தகத்தின் விஷய விசேஷங்கள் மறு சஞ்சிகையில் விரித்துரைக்கப்படும்.

---

## சமாசாரக் குறிப்புகள்.

---

**இராசதானிக் கலாசாலைச் சம்ஸ்கிருத போதகாசிரியர் உத்தியோகம் :**—கனம் பொருந்திய சகலபாஷா நிபுணராகிய தி. மி. சேஷகிரி சாஸ்திரியாரவர்கள், எம். ஏ., காலஞ்சென்ற பிறகு அவருக்குப்பின் அவ்வுத்தியோகத்தை நேரியவழியிற் பார்க்கத்தக்கவர் இல்லையென்றெண்ணிச் சென்னைப் பொதுஜன வித்தியா விசாரணைத் தலைவர் அவ்வேலையை நிறுத்தி அதற்குப் பிரதியாகச் சாமானிய பண்டிதர்களைக் குறைந்த சம்பளத்தில் நியமித்து விடுவதே யுசிதமென்று கூறினராம். நமது தேசாதிபதியவர்கள் அவர் கூற்றை நிராகரித்து ம-௱-௱-ஸ்ரீ, எம். அரங்காசாரியாரவர்களை, எம். ஏ. யை நியமித்திருக்கின்றனர் என்பதுணர்ந்த யாவரும் சந்தோஷப்படுவார்களென்பது திண்ணம்.

* * *

**சென்னை யுயர்நீதி சாலைக்கு இரண்டாவது சுதேசி நியாயாதிபதி :**—கனம் பொருந்திய நியாயாதிபதி ஷெப்பேர்ட் துரையவர்கள் உபகாரச்சம்பளம் பெற்று நீங்கினராகக் காலியாயிருந்த அவ்வேலைக்கு ம-௱-௱-ஸ்ரீ, ஸர். வி. பாஷியம் ஐயங்காரவர்களை நியமித்திருக்கிறார்களென்பது தெரிந்து நாம் மிகவுங் களிகூர்கின்றோம். இப்பொழுது நமது சென்னை யிராசதானி யுயர்நீதி சாலைக்கு இரண்டு சுதேசி நியாயாதிபதிகள் ஏற்பட்டமையைக் குறித்து நாம் நமது துரைத்தனத்தாருக்கு வந்தனமுள்ளவராகின்றோம்.

...தத்து. விலை :